24-3

உ

சிவமயம்.

ஸ்ரீசற்குருப்யோநமஃ.

# கோயிலூர்ப்புராணமென்னுஞ்

# சமிவனக்ஷேத்திரமான்மியவசனம்

கோவிலூர் ஆண்டவர் நூலகம், கோவிலூர்
A. No. 2279
R65(KOV)

இது

திருவிடைமருதூர்

ப்ரம்மஸ்ரீ

பிச்சுசாஸ்திரி சுவாமிகளால்

வடமொழி ஸ்காந்தபுராணத்தினின்று

மொழிபெயர்க்கப்பட்டு,

காரைக்குடி மேலமடாலயம்

சேவு. பழ. பழநியப்பய்யா அவர்கள்

குடும்பத்தாரால்

சென்னை சூளை.

ஸ்ரீ பாரதி அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

---

விபவஹூ (1928) கார்த்திகைமீ.

இதன் விலை ரூபா-அரை.

இப்புத்தகம் ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.

24-3

உ

சிவமயம்.

# ஸ்ரீகோயிலூர்ப்புராணம்.

## வன்னிவிநாயகர் துதி.

சீர்பூத்த மெய்யறிவின் புருவெனற்கோர் குறியீடு தெரித்த லேய்ப்பக், கார்பூத்த விருகவுருத் தெய்வவுருப் பூதவுருக் கலப்பத் தோன்றித், தார்பூத்த நசையாலுந் தாங்கொடுத்த வரத்தாலுந் தணவா தென்று, மேர்பூத்த சமிநிழல்வாழ் வன்னிவிநா யகர்மலர்த்தா ளிறைஞ்சி வாழ்வாம்.

## கொற்றவாளீசர் துதி.

மாமேவு கோகனக மரும்பன்மல ருதலல்குவிதன் மருவத் தோயாத், தூமேவு பரிதியெனத் தன்முனர்முத் தொழினடப்பத் தோயா தான்ஞேர், பாமேவு மிடங்கொள்வன்னி யிரண்டலமூன் றெனவமரர் பரவமேவுங், கோமேவு வன்னிவனக் கொற்றவாளீசர்பதங் குறித்து வாழ்வாம்.

## நெல்லைநாயகி துதி.

ஓரறிவு முதலாவை யறிவுயிர்ப்பைங் கூழ்தழைய வொருங்கு காக்கும், பேரறிவு வெளிப்படுப்பா னுறுணர்ச்சி யுயிர்ப்பயிர்முன் பிறங்கக்காத்துக், காரறிவு தபக்களைந்து காரணநோக் குறும் பெரியோர் கட்காநந்த, நேரறிவு மயமான நெல்லைநா யகிமலர்த் தா ணினைந்துவாழ்வாம்.

## கைலாயநாதர் துதி.

தன்னிகரி றலப்பெருமை தனையணர்ந்தோ மாதவர்தஞ் சங்க நாளு, மன்னிவசிப் பதுதெரிந்தோ்கழனிநகர் கைலையென வயங்க றேர்ந்தோ, பொன்னிநதிக் கரைமுதற்பற் பலவிருக்க மதுக்குடி லைப் பொலிதிரத்து, வன்னிவனத் திடைப்புகுந்த கைலாய நாதர்பதம் வணக்கி வாழ்வாம்.

## நித்தியகல்யாணி துதி.

சத்தியநிட் களநிருவி காரநிரஞ் சனபரசை தன்னி யத்தை மெத்தியநன் மலர்மணத்திற் பிரியாமை யுருவிடத்தும் விளங்கக் காட்டிப், பொத்தியபே ரவிச்சைகெடுத் தெவ்வுயிர்க்குஞ் சவானு பவப் பொலிவுநல்கு, நித்தியகல் யாணபரா பரையிருபொற் றாட் கமல நினைந்துவாழ்வாம்.

## வன்னிவிநாயகர் துதி.

அடைபவர்க டவிர்கோசங் கரங்காட்ட வதற்கமைசா தனந் தோள் காட்ட, வுடைதருகீ ழவத்தைவிழி காட்டமே லவத்தை மத ஆற்றங் காட்டி, நடைகெழுமற் றவர்புரியும் பாவனையை மருப்பெடுத்து நன்கு காட்டத், தடைதவிர்பே ரருள்கொழிக்கும் வன்னிவிநா யகர்மலர்த்தாள் சார்ந்து வாழ்வாம்.

## அகத்தியமுனிவர் துதி.

துன்னுபல் கருமஞ்சித்த சுத்தியா மாறுசெய்து
மன்னுமற் றதுபெறாது சைமினி வந்திரப்ப
முன்னுதண் கழனிநாதன் முழுதருள் பெற்றுஞானங்
கொன்னுமின் புறநவின்ற குறுமுனிக் கன்புசெய்வாம்.

## ஆலயப்பணியோர்கள் துதி.

கொற்றவா ளீசற் காலயவிமான கோபுர மண்டப மாதி, முற் றவார் வத்திற் புரிந்தவர் புரிவோர் முனிவரும் விழாச்சிறப் பெடுப் போர், செற்றபல்லுபசா ரங்களும் பரிவாற் செய்பவர் பிறவிரும் புநரு, முற்றவ ரவர்கள் யாவரா யினும்யா முண்மையிற் போற்று து முவந்தே.

## ஸ்ரீ முத்திராமலிங்க தேசிகர் துதி.

மேயபெருங்கழனிநகர்கோயிலூரெனும் பேர் மேவவிறையால யத்தைவிரித்தவருட்பெரியோன், பாயபுனறிரண்டாலியாயதென ச்சுத்தப் பரப்பிரம மிவ்வுருக்கொண் டுற்றதெனும்புரண, ஞயபுகழ் வேதாந்தசிரவணஞ்செய்தலகி லளவிலர்சைதன்னியமாகப் புரிந்த வறவோன், ஆயமுத்திராமலிங்க தேசிகனென் றுரைக்குஞ் சோதி லிங்க சொரூபனெனுஞ்சோதியை யேத்தெடுப்பாம்.

## ஸ்ரீதுறவுசுவாமிகள் துதி.

துறவொழுக்க மனைத்துமொரு வடிவுகொண் டாலன்ன தூய வன்றன் மயமாக யாவையுங்கண் டிருப்போன், மறவொழுக்கங் கடிந்துயிர்கள் சுவானுபவ மருவ வயங்கியவே தாந்தசிர வணமேற் றும் வலியோ, னறவொழுக்கந் தலையெடுப்பக் காரணங்கண் டுவப் போ னடங்குமிட மாகியசி தாகாசப் பிரிய, னுறவொழுக்கம் வளர்த்தவரு ணுசலதே சிகனென் றுரைத்திடுநந் தீசனெனு மொரு வனைவாழ்த் திடுவாம்.

## ஸ்ரீசிதம்பரதேசிகர் துதி.

மேலாய துறவினுக்கோர் துணையாகி யுள்ளான் விரிந்தபல புவ னமுங்கான் றிடுசோற்றிற் கண்டோ,னூலாய மறைமுடியின் பொருள்விளங்க வெடுத்து நலமாண வகர்க்கருளித் தன்மயமாக் கிடு வோன்,பாலாய சிவதருமம் பற்றறப்பா லிப்போன் பரப்பிரம சுவா னுபூ தியிற்சிறந்த மேலோ, னூலாய யாவுமுணர்ந் தவர்மனுவி னெடுத்து நுவலுமொரு சிதம்பரதே சிகனடியைப்பணிவாம்.

## ஆக்கியோன் பெயர்.

தூயமுத்தி ராமலிங்க தேசிகன்பே ரருள்பெற்றோன் சுகுண ஞான, மேயவரு ணுசலதே சிகனவன்பா லருள்பெற்று விளக்கஞ் சான்ற, பாயபுகழ்ச சிதம்பரதே சிகன்கேட்க வுயர்கழனிப் பதிப் புராணம், வாயமையப் புனைந்துரைத்தான் மீனுட்சி சுந்தரநா வலன்மிக்கோனே.

## பலன்

இன்னபுரா ணத்தையினி தெழுதுவோ ரெழுதுவிப்போர்
பன்னருஞ்சொற் பொருளுரைப்போ ருரைப்பவர்தம் பாற்கேட்
டென்னருமெண் ணரும்போக மிப்புவியி னுகர்ந்தீற்றி [போ
னன்னரொளி மிகுபிரம ஞானியரா யின்புறுவார்.

## இதுவுமது.

பொருள்பலவு மினிதமையிப் புராணமமர் கிருகத்து
வெருள்பலசெய் பூதபிசா சாதிகளு மேவாவா
லிருள்பலசெய் வறுமையற விந்திரைநீங் காதமர்வா
ளருள்பலபுத் திரர்பொலிய வமைந்துவிளங் குவர்மாதோ.

# ஸ்ரீகோயிலூர்ப்புராணம்

## இப்புராணத்திற் கதிகாரிகள்.

பிரியமிகுங் கொற்றவா ளீசர்பெருஞ் சரித்திரமா
யரியபுகழ் வேதாந்த முழுவதுநன் கமைதலினு
லுரியவதி காரிகளா யுள்ளவரிப் புராணத்தைத்
தெரியவமை குருமுகமாத் தெளிதரிற்றன் னியராவார்.

திகழ்தருசின் மயரூப சிதம்பரதே சிகன்மொழிய
விகழ்தருத விலாதவன்சொ லேற்றபெரும் புண்ணியத்தாற்
புகழ்தருமிப் புராணத்தைப் பாடினேன் புன்மையெலா
மகழ்தருபே ரறமுதலா யாவுமடைந் தனன்யானும்,

## வாழ்த்து.

இலங்குபுகழ் வன்னிவனம் வாழ்கவொளிர்
கொற்றவா ளீசர் வாழ்க
கலங்குதறீர்த் தெனையாண்ட நெல்லைநா
யகிபெரிய கருணை வாழ்க
மலங்குதலி லத்தலத்து மன்னிவளர்
மாதவர்கள் வாழ்க வாழ்க
நலங்குலவு மணிமன்று ணடநவில
வெடுத்தபொற்று ளும் வாழ்க.

துதி முற்றும்.

சிவமயம்.

கணேசாயநம:.

# சமிவனக்ஷேத்திரமான்மியவசனம்

## பாயிரம்.

சகல விக்கின நிவர்த்தகராயிருக்கின்ற விநாயகமூர்த்தியையும், ஞானகுருவான சண்முக மூர்த்தியையும், சத்திய க்ஞானனந்த பரிபூரண பரமாத்வைதராய் நித்திய சுத்த புத்த முத்த சுபாவராயிருக்கின்ற திரிபுவனேசுவரரையும், பரப்பிரம வித்தியா சொரூபியாய்ப் பரமசிவாபின்னையாய்ப் பக்தாபீஷ்ட பலத்தைக் கொடுப்பவளாய்ச் சருவசத்தி சொரூபியாய்ச் சகல ஜகந்நாயகியாய்ச் சருவ ஜகந்மாதாவாயிருக்கின்ற திரிபுவனேசுவரியையும், இவர்களின் அடியார்களையும் திரிவித கரணங்களாலும் வணங்குவாம்.

இனி, ஆறு சங்கிதையை யுடைத்தாய் இலட்சஞ் சுலோகமாயிருக்கின்ற ஸ்காந்தபுராணத்தில் முதலாவதான சனற்குமாரசங்கிதையில் க்ஷேத்திரகண்டத்தில் இருக்கின்ற வன்னிவன மான்மியத்தைச் சூதமகாரிஷி நைமிசாரணிய வாசிகளான ரிஷிகளுக்கு அருளிச்செய்த பிரகாரம் யான் என் புத்திக்குத் தோன்றினமட்டுந் தமிழ்மொழியாற் சொல்லுகின்றேன்.

பாயிரமுற்றிற்று.

## முதலாவது
## சௌனகாதிரிஷிகள் சூதமகாமுனிவரை நோக்கி வன்னிவனக்ஷேத்திரமான்மியத்தை வினவும் அத்தியாயம்.

---

பூர்வம் ஒருகாலத்தில் வேதவித்துக்களான ரிஷிகளெல்லோரும் நைமிசாரணியத்திற் பன்னிரண்டு வருஷத்திற் செய்துமுடிக்கத்தக்கதான யாகத்தை ஆரம்பிக்கிறதற்காக ஒருமித்துக் கூடினார்கள். (க)

அந்த ரிஷிகள் யாரெனில்:—சௌனகர், வசிட்டர், வாமதேவர், விசுவாமித்திரர், சாதாதபர், கௌதமர், காசிபர், கார்க்கியர், பிருகு, அத்திரி, மகாதபர், போதாயனர், சத்தியாஷாடர், மௌத்கலர், ஆபஸ்தம்பர், ஆணிமாண்டவியர், யாக்கியவர்க்கர், காத்தியாயனர், சதானந்தர், புலத்தியர், சுகோளர், பாஷ்களி, வீதிகோத்திரர், சாகல்லியர், சாலிகோத்திரி, தூமிரர், கௌஷீதகி முதலான அநேக ரிஷிகளாம். இவர்கள் உலோகானுக்கிரக நிமித்தமாய் எக்ஞத்திற்குத் தீக்ஷிதராகவும் அதற்குச் சாதகாசிரியராகவும் இருந்துகொண்டு, தீட்சை முதலான நியமத்துடன் முன் சொன்ன யாகத்தைச் செய்யத்தொடங்கினார்கள். (உ)

அந்தச் சமயத்திற் பரமசிவ பக்தோத்தமராய், இந்திரிய நிக்கிரகமுள்ளவராய், பதினெண் புராணமும் அறிந்தவராய், சர்வசாஸ்திர சமர்த்தராய், சகவுற்பத்தி திதி லயங்களுக்குக் காரணமாய்ச் சத்தியக்ஞானனந்த சொரூபமாய் இருக்கின்ற பிரத்தியக பின்னமான பரசிவமே தானென்று அனுபவிக்கின்றவராய் இருக்கின்ற சூதமகாமுனியானவர், தன் சீடர்கள் தன் சீடருக்குச் சீடர்கள் இவர்களுடனே

அந்த எக்ஞசாலைக்கு எழுந்தருளி வந்தனர். அந்தச் சூத மகாமுனிவரைச் சவுனகாதியரான சகல முனிவர்களும் நோக்கி எதிர்கொண் டழைத்து வந்து, ஆசனமுதலானவை கொடுத்து, சாஸ்திர விதிப்படி அர்க்கிய பாத்திய ஆசமனாதிகள் செய்வித்து, மிகுந்த அன்புடன் பூசித்தார்கள். (அ)

பின்பு அந்தச் சூதமகாமுனியானவர் சௌனகாதி ரிஷிகள் செய்த உபசாரத்தைப் பெற்று, சிரம பரிகாரத்தோடு சந்தோஷ சித்தராயிருக்கும் அளவில், அந்த முனிவர்கள் அவரை நோக்கி வினவினார்கள். (௯)

அஃதே தென்னில்:— சர்வக்ஞராய்ப் பரமசிவ பத்தியே சரணமாய் அடைந்திருக்கின்ற சூதமகாரிஷியைப் பார்த்து, "ஏ சுவாமின்! தங்களுடைய முகாரவிந்தத்தினின்றும் பெருகாநின்ற புராண கதையாகிய அமிர்தத்தை யாங்கள் பானம் பண்ணியும் அதில் எவ்வளவுந் திர்ப்தியுண்டாகவில்லை. (௧௦)

இமோத்பருவதந் தொடங்கிச் சேதுபரிபந்தம் மத்தியிலுள்ள புண்ணிய தீர்த்தங்கள் புண்ணிய ஸ்தலங்கள் யாவும் சருவக்ஞரா யிருக்கின்ற உம்மால் எங்களுக்கு முன் உபதேசிக்கப்பட் டிருக்கின்றனவே. (௧௧)

அவைகளினுங் காவேரிதீரத்தில் சருவ சித்தியுங் கொடுப்பதான மாயூர முதலான புண்ணிய சிவக்ஷேத்திரங்கள் இருக்கின்றனவென்று விசேடமாகத் தங்களாற் சொல்லப்பட்டதே. (௧௨)

அவைகளுக்குள் திருவானைக்கா என்கின்ற சிவக்ஷேத்திரத்திற்குத் தக்ஷிணபாகத்தில் அஞ்சுயோசனை தூரத்திலிருக்கின்றதாயும், சத்திய புஷ்கரணி தீர்த்தத்தோடே கூடினதாயுந் திருமெய்யமென்று விளங்காநின்றதாயு மிருக்

கின்ற சத்தியகிரி க்ஷேத்திரத்திற்குத் தக்ஷிணதிக்கில் ஒரு யோசனை தூரத்திலிருக்கின்றதாயும், கண்ட தேவியென்று விளங்காநின்ற சொர்ணவருஷேசுவர க்ஷேத்திரத்திற்கு உத்தரதிக்கில் அரையோசனை தூரத்தி லிருக்கின்றதாயும், திருப்பெருந்துறைக்கு மேற்குத்திக்கில் ஒன்றரையோசனை தூரத்திலிருக்கின்றதாயும் திருப்புத்தூருக்குக் கிழக்குத் திக்கில் முக்கால் யோசனை தூரத்தி லிருக்கின்றதாயுங் கழனி வாசல் என்று விளங்காநின்றதும் சாலிவாடி என்றும் வன்னிவனமென்றும் ஸ்ரீவல்லப மென்றும் பிரசித்த மானதுமான ஒரு சிவக்ஷேத்திர முண்டென்று தங்களால் முன் சொல்லப்பட்டது. இப்போது அந்தச் சிவக்ஷேத்திர மகிமையைக் கேட்பதற்கு எங்களுக்கு மிகுந்த அன்புண்டா யிருப்பதால், அதைத் தாங்கள் தயையினால் அனுக்கிர கம் பண்ணவெண்டும்'' என்று சௌனகாதி முனிவர்கள் வினவினார்கள். (கசா)

இவ்விதம் வினவிய ரிஷிகள்வசனத்தைச் சூதமா முனிவர் கேட்டு, நிஷ்கள நிஷ்கிரிய நிருவிகார நிரஞ்சன நிர்மல நிஷ்பிரபஞ்ச நிராகார நிர்த்தொந்த நித்திய சுத்த புத்த முத்த சச்சிதானந்த பரிபூரண பரமாத்துவிதசொரூப ராய்ச் சர்வஞ்ஞத்துவ சர்வசத்தித்துவ சர்வேசுரத்துவாதி யான அனந்த கலியாணகுணங்கள் நிறைந்தவராய்ச் சந்திர சூடராய்ச் சடாதாரியாய்க் கங்காதரராய்த் திரிநேத்திரராய் நீலகண்டராய்ச் சதுர்ப்புஜராய் மான்மழுதிரிசூல முதலிய வைகளைத் தரிப்பவராய்ப் பார்வதி சமேதராயிருக்கின்ற திவ்விய மங்கள மூர்த்தியான பரமசிவனை ஒரு முகூர்த்த பரியந்தந் தியானித்து, ஆனந்தபாஷ்ப புளகாங்கிதராய் மிகுந்த சந்தோஷத்துடனே வன்னிவன மகாத்மியத்தைச் சொல்லத் தொடங்கினார். (கஎ)

ஏ சௌகாதி ரிஷிகளே! இன்று உங்களால் இந்தச் சிவக்ஷேத்திர மகிமையின் நினைப்பை உண்டுபண்ணப் பட்டபடியால், நீங்களும் நானும் மிகவுந்தன்னியராயி னோம். (கஅ)

இந்த வன்னிவன க்ஷேத்திரத்தில் சர்வபாவ நிவர்த்த கராய்த் தர்மார்த்த காமமோட்சத்தைக் கொடுப்பவரா யிருக்கின்ற சாம்ப பரமசிவன் எப்போதும் விசேடமாய் விளங்கிப் பக்தர்களுக்குச் சர்வாபீஷ்டத்தையும் அனுக் கிரகஞ் செய்துகொண் டிருக்கின்றபடியால், இந்தச் சிவ க்ஷேத்திரத்தை நினைத்த மாத்திரத்தாற் சகல சீவருக்கும் சமஸ்த பாவமும் நீங்கிச் சகல புருடார்த்தமுங் கிடைக் கும். (கக)

அகண்ட சோதிர்மயலிங்கமாய் விளங்கிய யாதொரு பரமசிவனுடைய திருவடியையும் முடியையுங் காணும் பொருட்டு அரி அயன் இருவரும் வராகரூபமாயும் அன்ன ரூபமாயும் பாதாளத்திலும் ஆகாசத்திலும் மிக முயன்று தேடியபோதும் அந்தத் திருவடியையும் முடியையுங் காணார்களோ அப்படிப்பட்ட அகண்ட சிதாகாச ரூப ராய்ச் சர்வக்ஞத்துவாதி குணமுள்ளவராய்ச் சந்திர சூட ராய் விளங்கிய ஸ்ரீ பரமசிவனுடைய நிகரில்லாத அனந்த மகிமையை இச்சகத்தில் யார் வர்ணிக்கவல்லோர்? (உ0)

திருப்பாற் கடலில் மந்தரம் மத்தாகவும், வாசுகி நாணாகவுஞ் செய்துகொண்டு, சகல சுராசுரர்களும் அமிர்த மதனஞ் செய்யும்போது வாசுகி முகத்தினின்றும் மகா கோரமான காளகூட விஷமுண்டாகிச் சகத்தையெல்லாம் வியாபித்துத் தகிக்கும்போது பிரமா முதலான சகல தேவ ரும் நிச்சேட்டராயிருக்க; அச்சமயத்திற் பரமதயாளு வான யாதொரு பரமசிவன் அவ்விடத்திற்றோன்றி, அந்த

விஷத்தை யமுதம்போலப் பானஞ் செய்து, எல்லாச் சகத்தையும் இரக்ஷித்தாரோ அந்தப் பரமசிவனுடைய நிரதிசய மகிமையை யார் வர்ணிக்க வல்லோர்? ஆதலால், இம்மகிமையைச் சொல்லுவதினும் மூகத்தன்மையை அடைவதே உத்தமம். (உக)

ஆயினும் அன்பினால் அந்தப் பரமசிவனுடைய மகிமையைக் கிஞ்சித்மாத்திரம் எனக்குத் தோன்றியமட்டுஞ் சொல்லுகிறேன். இதை நீங்கள் அனைவரும் ஏகாக்கிரமனதாய் மிகுந்த சிரத்தையுடன் கேளுங்கள். (உஉ)

பூமி இரதமாகவும், சந்திர சூரியர் சக்கரங்களாகவும், வேதங்களே பரிகளாகவும், பிரமாவே சாரதியாகவும், மகாமேருவே வில்லாகவும், வாசுகியே நாணாகவும், விஷ்ணுவே பாணமாகவும் இப்படி லீலையாக அங்கீகரித்துக் கொண்டு, யாதொரு பரமசிவன் புன்சிரிப்புக் கொண்டே திரிபுரதகனஞ் செய்தாரோ அப்படிப் பட்ட சர்வ வல்லபமுள்ள திரிபுவனேசுவரர் எப்போதும் எனது இருதயத்தில் விளங்கக் கடவர். (உங)

இப்படிச் சர்வ சத்திமானாய்ச் சர்வாத்மகராய்த் திரிவித பரிச்சேத சூனியராய்ச் சந்திரசேகராதி சின்னமுள்ள திவ்யமங்கள மூர்த்திதரராய்ப் பகவானாயும் திருநெல்லை நாயகிக்கு நாதனாயுமிருக்கின்ற ஸ்ரீ இராசகட்க பரமேசுவரரைத் தியானித்துக் கொண்டு, சமிவன மான்மியத்தைச் சூதமகாமுனிவர் சொல்லத் தொடங்கினார். (உச)

இப்படி ஸ்காந்த புராணத்தில் க்ஷேத்திர கண்டத்திலுள்ள சமிவனமான்மியத்தின் முதலாவது அத்தியாயம்

முற்றிற்று.

## இரண்டாவது
## க்ஷேத்திரமகிமையுரைக்கும் அத்தியாயம்.

சூதமகாரிஷி சொல்லுகிறார்:—

சமிவன மென்கிற சிவக்ஷேத்திரமானது க்ஷேத்திரங்களுக்கெல்லாம் உத்தமமாயுஞ் சீவர்களுடைய சமஸ்த பஞ்சமா பாதகங்களையும் போக்குவிப்பதாயும் மதுபுட்கரணியென்கின்ற தீர்த்தத்தோடே கூடினதாயும், (க)

நானாவித மிருகங்கள் பட்சிகளோடே கூடினதாயும், நானாவித விருக்ஷங்களாலும் நானாவிதமான தாமரை செங்கழுநீர் முதலான புட்பங்களுடைத்தான வாவிகளாலும் அலங்கரிக்கப்பட்டதாயும், மயில்களுடைய மூச்சுக்காற்றினாற் பசிதீர்ந்து திருப்தியடைந்த சர்ப்பங்களை யுடையதாயும், புலிக்குட்டிகளா லூட்டப்பட்ட மடிகளை யுடைத்தான பசுக்களால் வியாபிக்கப்பட்டதாயும், சிவபக்தி பரரான வாலகில்லிய ரென்கிற ரிஷிகளாலுஞ் சூரியாக்கினிகளுக்குச் சமமான தேஜசை யுடைய சந்நியாசிகளாலுஞ் சேவிக்கப்பட்டதாயும், வேத வித்துக்களான அந்தணர்களுடைய வேத கோஷத்தை யுடையதாயும், (ரு)

சீவர்களுக்குத் தபசை யாரம்பித்த மாத்திரத்தினாலே தானே சகல சித்தியுங் கொடுப்பதாயும், சந்திர சூடராயிருக்கின்ற சாட்சாத் பரமசிவனுக்குத் தக்ஷிண கைலாசம் போலே சந்தோஷ ஏதுவாயும் விளங்காநிற்கும். (சா)

சிவாராதனை பண்ணாதவர்களாயும் யாகதானாதி புண்ணிய கர்மங்கள் செய்யாதவர்களாயும் இருக்கின்ற சனங்களுக்கு இந்த க்ஷேத்திரம் ஒருகாலத்தும் அடையக் கிட்டாது. இந்தச் சமிவன க்ஷேத்திரத்துக்குச் சாலிவாடி

யென்றும் ஸ்ரீவல்லப மென்றும் பிரசித்தமான நாமங்க ளுண்டு. (எ)

அனேக ஜன்மத்திற் செய்த புண்ணிய கர்ம பரிபாகத் தினல் இந்தச்சமிவனக்ஷேத்திர நாயகரான திரிபுவனேசு வரரை எவர்கள் மிகுந்த பக்தியுடனே சேவிக்கிறார்களோ அவர்களுக்கு வேதம் யாகம் தானம் தபசு முதலான சத் கர்மங்கள் ஒன்றும் வேண்டியதில்லை. இந்தச் சச்சிதானந்த பரிபூரணரான திரிபுவனேசுவரரை ஒருகாலாகிலும் எந்த முமூட்சுக்கள் அன்புடனே உண்மையாகத் தரிசனம் பண் ணுகிறார்களோ அவர்கள் அந்தத் தரிசன மாத்திரத்தாற் சீவன்முத்தராவார்கள். (கூ)

இந்தத் திரிபுவனேசுவரருக்கு இராசகட்கபரமேசுவர ரென்று நாமமுண்டு. இந்த க்ஷேத்திரத்திற் சாம்பமூர்த்தி யான இந்த இராசகட்க பரமேசுவரரை யாதொருவர் இரண்டு நேத்திரத்தினற் றரிசிக்கிறார்களோ அவர்கள் இந் திரலோகத்தில் ஆயிரங்கண்களுடைய தேவேந்திரனை விருந்து, அரம்பாதி அப்ஸர மாதருடைய நிர்த்தனத்தைப் பார்த்துக் களிப்படைவார்கள். (கo)

இந்தப் பரமசிவனை யாதொருவ ராதரவோடே ஒரு முகத்தால் தோத்திரம் பண்ணுகிறார்களோ அவர்கள் சத் தியலோகத்தில் நான்கு முகத்தை யுடைத்தாகிப் பிரமபட் டத்தை யடைந்து விளங்குவார்கள். (கக)

இந்த க்ஷேத்திரத்தில் திரிபுவனேசுவரருடைய சந்நி தானத்தில் ஆமலகமாத்திரமாகிலும் அன்னத்தை அந்தண ராதியர்களுக்கு ஆதரவுடனே கொடுப்பவர்கள் சொர்க் காதி லோகத்திற் புதிதான அமிர்தத்தைப் பானம் பண்ணு வார்கள். இந்த க்ஷேத்திரத்தில் சாலிவாடீசுவரி நாயகரான திரிபுவனேசுவரருடைய சந்நிதானத்தில் மறையோருக்குத்

தமக்குச் சத்தியுள்ளமட்டுஞ் சிரத்தையுடன் சுவர்ணதானம் பண்ணினவர்கள் குபேரனைவிட அதிகமான செல்வத்தை அடைவார்கள். இந்தத் தலத்தில் யாதொருவர் மரணத்தை யடைகிறார்களோ அவர்கள் அர்த்த சந்திர சடாதாரியாய்க் கங்காதரராய்த் திரிநேத்திரராய்க் காளகண்டராய்ச் சதுர்ப்புஜராய் மான்மழு முதலானவற்றைத் தரித்திருக்கின்ற பரமசிவனுடைய சாரூப்பியத்தை யடைவார்கள். இந்த ஸ்தலத்தில் சிவராத்திரி தினத்தில் இரண்டு கண்களும் விழித்துக்கொண்டு பக்தியுடன் எவர்கள் சாக்கிரதையா யிருக்கிறார்களோ அவர்களுக்கு மூன்று நேத்திரத்தை யுடைய பரமசிவ சாரூப்பியங் கிடைக்கும். யாதொருவர் இந்த ஸ்தலத்தில் ஒருநிமிடமாத்திரமாகிலும் வாசஞ் செய்வாரோ அவர்கள் தேவலோகத்திற் சுந்தரமான தேவசரீரத்தை அடைந்து அரம்பாதி சம்போகத்தையும் அடைவார்கள். யாதொருவர் மிகுந்த பக்தியுடன் நிர்மலமான விபூதியால் சர்வாங்கத்திலும் உத்தூளனம் பண்ணித் திரிபுண்டரந் தரித்துக் கண்டஞ் சிரம் கரம் முதலான அவயவங்களில் உருத்திராக்க மாலைகளை விதிப்படி தரித்துப் பஞ்சாட்சரஞ் ஜபித்துத் திரிபுவனேச மகாலிங்கத்தை நியமமாக உபாசிக்கிறார்களோ அவர்கள் இகத்திற் சகல போகமும் புசித்து, அந்தத்திற் சிவசாயுச்சியத்தை யடைவார்கள். விபூதி உருத்திராக்கங்களைத் தரித்துக் கொண்டு செய்த கன்மங்களே தந்தம் பலத்தைக் கொடுக்குமே அன்றி, அவைகளைத் தரியாமற் செய்த கருமம் யாதொரு பலத்தையுங் கொடுக்கமாட்டாது. ஆதலால் விபூதி உருத்திராக்கந் தரித்துக்கொண்டவர்களே காண்டத் திரயத்திலும் அதிகாரியாகுவரே தவிர, விபூதி உருத்திராக்கந் தரியாதவர்கள் அதிகாரிகளாகார்கள். ஆகையால் முமுட்சுவானோர் இந்தச் சமிவன க்ஷேத்திரத்தில்

மிகுந்த அன்புடனே விபூதி உருத்திராக்கங்களைத் தரித்துக்கொண்டு திரிபுவனேசுவரரை நியமமா யுபாசித்து ஞானப்பியாசஞ் செய்வார்களாகில் அவர்கள் சீவன்முத்தியை யடைந்து பின்பு விதேக முத்தியையும் அடைவார்கள். இப்படி விபூதி ருத்திராக்ஷங்களைத் தரித்துக்கொண்டு பரமசிவ உபாசனை செய்பவர்களுக்கே முத்தி சித்திக்குமென்று பிரகச்சாபால உபநிஷத்தும், காலாக்கினி உருத்திர உபநிஷத்தும், அதர்வசிரோபநிஷத்தும் மற்றும் அனேக உபநிஷத்துக்களும் கோஷிக்கின்றன. (கசு)

இப்படி ஸ்காந்த புராணத்தில் க்ஷேத்திர கண்டத்திலுள்ள சமிவன மான்மியத்தின் இரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

ஆக அத்தியாயம் உ-க்குச் சுலோகம்-சo.

## மூன்றாவது

## அகஸ்தியர் ஜைமினிக்கு வீரபாண்டியன் சரித்திரமுரைத்த அத்தியாயம்.

சூதமகாரிஷி சொல்லுகிறார்:—

ஏ ரிஷி சிரேஷ்டர்களே! யாதொரு இராசகட்க பரமேசுவரருடைய கதையைச் சிரவணம் பண்ணினமாத்திரத்தாற் சகல பாவமு நிவர்த்தியாகிச் சகல புருடார்த்தமுங் கிடைக்குமோ அப்படிப்பட்ட கதையைச் சொல்லுகிறோம்; சிரத்தையுடனே கேளுங்கள். (க)

இந்தக் கதை முற்காலத்தில் மகாத்மாவா யிருக்கிற அகஸ்திய முனியாற் ஜைமினி ரிஷியின்பொருட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் கதையை இப்போது நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். (உ)

அஃதென்னவெனில், முன் துவாபர யுகாந்தத்தில் வேதவித்துக்களுக்குள்ளே உத்தமராய் மகா யோகீஸ்வரராய் இருந்த வியாசபகவானானவர் கலியுகத்தி லுண்டாகப் போகின்றவர்களும், அற்பாயுசும் அற்ப புத்தியும் அகண்டமான வேதத்தை அத்தியயனம் பண்ணுகிறதற்குச் சமர்த்தமின்மையு முடையவர்களாய் ஜனிக்கப்போகிற வேதாதிகாரிகளான பிரம க்ஷத்திரிய வைசியர்களுக்கு எளிதாய் அத்தியயனம் பண்ணும்பொருட்டு அகண்டமாய் ஒன்றாயிருந்த வேதத்தை இருக்கு எசுர் சாமம் அதர்வணம் என்று நான்குவிதமாகச் சிவாக்கினையினாலே பிரித்துச் சொன்னார். பின்பு அந்த நான்கு வேதத்தையும் பயிலர் வைசம்பாயனர் சைமினி சுமந்து என்கின்ற நான்கு சீடருக்குங் கிரமமாக உபதேசித்தார். (அ)

அந் நான்கு முனிவரும் அந்த நான்கு வேதங்களையும் உலகத்திற் கிரமமாக விளங்கும்படி செய்வித்தார்கள். அந்த நான்கு வேதங்களுக்குள் இருக்குவேதம் இருபத்தொரு சாகையாகவும், எசுர்வேதம் நூற்றொரு சாகையாகவும், சாமவேதம் ஆயிரஞ்சாகையாகவும், அதர்வண வேதம் ஒன்பதுசாகையாகவும் பிரிக்கப்பட்டிருக்கும். அந்தப் பயிலாதி நால்வர்க்குள் சாமவேதத்தைச் செகத்தில் விளக்குவித்தவரான சைமினியானவர் அக்கினிஷ்டோமம் அதிராத்திரம் வாசபேயம் முதலான யாகங்களைச்செய்துஞ் சித்தசுத்தி யடையவில்லை. (கூ)

ஒருகாலத்தில் அந்தச் சைமினியானவர் அகஸ்திய மகா முனிவருடைய ஆச்சிரமத்தை யடைந்து, சர்வக்ஞராய் இந்திரிய செயமுள்ளவராய்ச் சொரூப நிட்டையையுடையவரான அகஸ்திய மகாரிஷியை நோக்கிச் சொல்லுகின்றார்.

"ஏ மகாத்மாவாகிய அகஸ்திய மகாரிஷியே! வேதத்திற் சொல்லப்பட்ட கர்மங்களனைத்தையும் செய்தும் அதனால் எனக்குச் சித்தசுத்தி யென்றுவரவில்லை. அன்றியும் நான் கர்மமீமாஞ்சை என்னும் சாஸ்திரத்தில் வேதங்களுக்குக் கர்ம பரத்துவஞ் சாதித்திருக்கின்றேன். அதனாலுஞ் சித்த சுத்தி வரவில்லை" என்று சொல்ல, அச்சைமினியை நோக்கி அகஸ்திய மகாரிஷி சொல்லுகின்றார்.

"ஏ சைமினியே! நீர் கர்மத்தைச் சிவார்ப்பாணமாகச் செய்யாமற் கேவலங் கரும மாத்திரத்தைச் செய்ததால் உமக்குச் சித்த சுத்தி உண்டாகவில்லை. (௧௩)

சிவர்ப்பணமாகச் செய்யப்பட்ட கருமத்தாற் சித்த சுத்தியுண்டாகுமே தவிர; கேவலங்கருமத்தாற் சித்த சுத்தி ஒருவருக்கு மொருகாலத்து முண்டாகமாட்டாது. (௧௪)

கருமத்தையே சாதிக்காநின்ற உமக்குப்பிரமஞ்ஞானம் லபிக்கமாட்டாது. கருமிகள் தமது கருமவசத்தாற் பிரமலோக பரியந்தமான புண்ணியலோகத்தை அடைந்து புனராவிர்த்தியை யடைவார்கள். அகண்ட பரிபூரண பரமசிவ சொரூப நிஷ்டா பரரான ஞானிகள் ஒருகாலத்தும் புனராவிர்த்தியை அடையமாட்டார்கள். ஏனெனில் ஞானக்கினியானது அவர்களுடைய சகல கர்மங்களையுந் தகித்து விட்டதன்றோ" என்றனர். (௧௫)

இவ்விதமாகச் சொல்லிய அகஸ்தியர் வசனத்தைச் சைமினிகேட்டு, உடனே அந்த மகா முனியான அகஸ்திய மகாரிஷியை நமஷ்கரித்து, "ஏ மகாரிஷியே! யாதொரு பரசிவ சொரூபஞானத்தாற் புனராவிர்த்தி ரகிதமான மோட்சபதங் கிடைக்குமோ? அந்தப் பரசிவசொரூப ஞானத்தைத் தேவரீர் தயையினால் எனக்கு இப்போது

அனுக்கிரகம் பண்ணவேணுமென்று கேட்டதற்கு அகஸ்தியர் உத்தரஞ் சொல்லுகின்றார். (கஎ)

ஏ சைமினியே! சொல்லுகின்றேன் கேட்பாயாக:— முற்காலத்திற் சமிவனத்திலிருக்கின்ற மதுபுட்கரணிதீரத்தில் மதுப்பிரியர் என்கிற மகாரிஷிக்குப் பிரமாவினால் இந்தப் பரசிவ சொரூபஞானம் உபதேசிக்கப்பட்டிருக்கிறது. இந்த அர்த்தத்தைப் பூர்வம் வீரபாண்டியன் என்கிற மகாராசன் நம்மைக் கேட்க, நாம் அவனுக்குச் சொல்லியிருக்கின்றோம். அதை இப்போது உமக்குச் சொல்லுகின்றோம்

இந்தச் சமிவனக்ஷேத்திரத்துக்கு தக்ஷிணபாகத்தில் இரண்டுயோசனை தூரத்திற் பிரகாரமாடமாளிகையினால் அலங்கரிக்கப்பட்டதாய்ச் சகல பாக்கியமு நிறைந்ததாய் நானாவித விருக்ஷ புட்பாதிகளினால் அலங்கரிக்கப்பட்டதான காளையார்கோவில் என்று விளங்கிய காளியபுரமென்றொரு சிவக்ஷேத்திரமுண்டு. (உ௦)

அந்த க்ஷேத்தில் மகாபலம் பொருந்திய தனுசையுடையவனாய்ச்சத்துருக்களைச் செயித்தவனாய், சிவபூசையுடையவனாய்ச் சிவபக்திபரனாய், எப்போதும் எல்லார்ச்சீவரிடத்தும் தயையுள்ளவனாய், முத்துமாலை பவளமாலை உருத்திராக்க மாலைகளையும் விபூதியையுந் தரிப்பவனாய் வீரபாண்டியன் என்கின்ற நாமமுடைய ஓரரசன் இருந்தனன். (உஉ)

அப்போது அந்த அரசன் காளீஸ்வரர் பிரசாதத்தால் உத்தமமான ஒரு கட்கத்தை யடைந்து, அந்தக் கட்கத்தினால் சகல சத்துருக்களான இராசர்களையும் யுத்தத்திற்செயித்து, விளங்கினான். அந்தக் கட்கத்தால் இராசர்களைச் செயித்தபடியால் அதற்கு இராசகட்க மென்று நாமம் வந்தது. சுவர்ணமயமான உறையின்கண் போடப்

பட்டு விளங்கும் இராசகட்கமென்னும் அந்தவாளை அந்த அரசன் எவ்விடத்திற் சென்றபோதிலுங் கைவிடாமற் றரித்துக்கொண்டிருந்தனன். (உச)

ஒரு காலத்தில் அந்த வரசன் வேட்டையில் இச்சை யுடையவனாய்க் கட்கம், பாணம், தனுசு முதலியவைகளைத் தரித்தவனாய், உடும்பின் சருமத்தால் மறைக்கப்பட்ட அஸ்தத்தை யுடையவனாய்த் திடமான கவச முடையவனாய்ச் சொற்ப சேனைகளுடனே கிராதர்களினாலே மார்க்கங் காட்டப்பட்டவனாக ஆரணியத்திற் சென்றான். (உரு)

பனை, பலா, மா, மகிழ், இலுப்பை, அரசு, முருக்கு, பாதிரி, நாவல், விளா, புன்னை, கருங்காலி, இலந்தை, வில்வம், தாணி, நாரத்தை, எலுமிச்சை, மந்தாரை, வேம்பு, தாழை, அலரி, நொச்சி இவை முதலான அனந்த விருக்ஷங்களினால் சூழப்பட்டதாய் மதமிகுந்த வண்டுகளின் கானமுடையதாய்ப் பயங்கரமான நானாவித சிம்மம் வியாக்கிர முதலான மிருகங்கள் சஞ்சரிக்கப்பட்டதாய்ச் சிம்மத்தாற் பிளக்கப்பட்ட யானையினுடைய மத்தகத்தினின்றுஞ் சிதறியுள்ள முத்துக்களை யுடையதாய்க் கோரைக்கிழங்குக்காகப் பன்றியாற் பறிக்கப்பட்ட பூமியை யுடைத்தானதாய்ப் பெரிதான சர்ப்பங்களுடையதாய் மகாகோரமாயிருக்கின்ற வனத்தில் வேட்டைக்குச் சகாயமான அனேக சாமக்கிரியைகளுடனே பிரவேசித்து, அங்கங்கே வலைகளைக்கட்டிக் கொப்பங்கள் உண்டுபண்ணிச் சேனைகள் அந்தந்த மிருகங்களைச் சத்தித்து வெருட்பிக்கும்போது புலி, கரடி, பன்றி, எருமை, மான் முதலான அனேக மிருகங்கள் வெகு சத்தத்துடனே நாலு திக்கிலும் கிளம்பிச் சஞ்சரித்தன. (௩௪)

அப்போதந்த அரசன் வேட்டையிற் பிரியமாய் நாணிற்பூட்டப்பட்ட பாணத்தை யுடையவனாய் வலைகொப்பங்களுக்குள் அகப்பட்டனவும் தப்பியோடாநின்றனவுமான மிருகங்களைத் தானே சங்கரித்துத் தன் சேனைகளுடனேகூட வெகுநேரம் வேட்டையாடும்போது அவ்வனத்தில் வெகு சுந்தரமாய் மகா வேகத்துடனே கூடியோடாநின்ற ஒருமானைக் கண்டான். (௩எ)

பின்பு அந்த மானையுஞ் சங்கரிக்க இச்சை யுள்ளவனாய்த் தானொருவனாகவே துரத்தும்போது, அந்த மானும் பயந்து சில வனத்தில் மறைந்துஞ் சில வனத்திற் றெரிந்தும் வெகு தூரம் வரைக்கும் இந்த இராசனை வஞ்சித்து இழுத்துக்கொண்டு போய்விட்டது. அப்படிப் போகும் போது அவ்வரசன் பூர்வ புண்ணிய வசத்தாற் சமிவனமென்கின்ற க்ஷேத்திரத்தை யடைந்து, வெய்யிலினாற் றபிக்கப்பட்டவனாய் வருத்தம் அடைந்து, அவ்விடத்திற் பார்க்கும்போது நிர்மலசலமுடைத்தாய்ச் சகல பாவங்களையும் போக்குவதாய் மகா மங்களமானதாய் விளங்கும் மதுபுட்கரணியென்கின்ற தீர்த்தத்தைக் கண்டு, அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி, நித்திய கரும முடித்துக் கந்தமூல பலாதிகளைப் புசித்து, அந்தத் தீர்த்தைப் பானம்பண்ணி சிரமத்தினாற் பூமியில் தழைந்துள்ள ஒரு விருக்ஷத்தின் சாயையில் வஸ்திரத்தை விரித்து இராசகட்கத்தை எதிரே வைத்துக்கொண்டு சுகமாய் நித்திரை செய்தான். (௩௩)

பின்பு சர்வாத்மகராய்ச் சர்வவியாபியாய்ச் சர்வசத்தியுள்ளவராய் இருக்கின்ற பரமேசுவரர் அவ்விடத்தில் நித்திரை செய்கின்ற தம்முடைய பக்தனான வீரபாண்டிய இராசாவின் இதயத்திலுள்ள பக்தியையும் தைரிய சௌரியாதிகளையுஞ் சோதிக்க நினைத்தருளி, தமது மாயாசத்தியினால்

அந்த வனத்தில் ஒருபிராமணன் புலியாற்பற்றப்பட்டுவருந் திவதாக இராசாவிற்குத் தோற்றும்படி செய்தனர். (சச)

இப்படி ஸ்காந்தபுராணத்தில் க்ஷேத்திர கண்டத்திலுள்ள சமிவன மான்மியத்தின் மூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

ஆக அத்தியாயம் மூன்றுக்குச் சுலோகம் அரு.

---

## நான்காவது வீரபாண்டியனுக்கும், மாயப்புலிக்கும் சம்வாதம் உரைக்கும் அத்தியாயம்.

அகஸ்தியமகாரிஷி சொல்லுகின்றார்:—ஏசைமினியே! பின்பு புலியின் கையில் அகப்பட்ட அந்தப் பிராமணனை வன் புலி நகங்களினாலே பீறப்பட்டவனாய், "ஏ மகாரா ஜாவே! வியாக்கிரத்தினாற் பீடிக்கப்பட்டிருக்கிற என்னை இரட்சியும் இரட்சியும்" என்று வெகு தீன சத்தமாய் அழுதுகொண்டு கூப்பிட்டான். (க)

அந்தச் சத்தத்தை அந்த வீரபாண்டிய மகாராசா கேட்டு, உடனே வெகு பரபரப்பாக எழுந்திருந்து, முன் தான் சமீபத்தில் வைத்திருந்த இராசகட்கத்தை நாலுதிக்கி லும் பார்த்து அதைக்காணமல் "ஆ ஆ இதென்ன ஆச்சரி யம்" என்று மனதில் நினைத்து, நிராயுதனாயிருந்தபோதி லுந் தைரியத்தினாலே புலியின் கையில் அகப்பட்ட பிராம ணனை விடுவிக்கவேண்டி அதன் சமீபத்திற் சென்றான். (உ)

சமீத்து வரும் அந்த இராசாவைப் பார்த்து அப்புலி யானது "ஏ இராசாவே! நான் மிகப் பசியடைந்திருக்கின் றேன்; என் சமீபத்தில் நீ வருவாயானால் உன்தேகத்தை

இந்த க்ஷணமே பக்ஷித்துப்போடுவேன்; சந்தேகமில்லை''
என்று யானிட வாக்காற் சொல்ல; அந்தவசனத்தை இரா
சன்கேட்டு மகாதைரியத்தோடே அப்புலியைப் பார்த்துச்
சொல்லுகிறுன். (ரு)

''ஏ புலியே! நல்ல அன்ன முதலியவற்றைப் புசியா
மையினுலேயுந் தபசினுற் சரீரம் மிகவும் வருந்தினதினுலே
யும் உலர்ந்த அஸ்திகள் தெரியும்படியாயிருக்கின்ற இந்தப்
பிராமணன் சரீரத்தை நீ பட்சித்ததனுல் உன் தந்தங்களுக்கு
ஆனி உண்டாகுமே தவிரப்பசிநீங்கப்போகாது. ஆதலால்
நல்ல அன்னுதி புசித்ததனுற் பெருத்த மாமிசாதிகளை
யுடைய என் தேகத்தைப் பக்ஷி; பிராமணன் தேகத்தை
விட்டுவிடு'' என்று சொல்லினன். அங்ஙனம் சொன்ன அவ்
விராசாவின் வசனத்தைக் கேட்டுப் புலி சொல்லுகிறது.

''ஏ இராசனே! நீ சமுத்திரஞ் சூழ்ந்த பூமியெல்லாம்
பாலித்துக்கொண்டு மாதா பிதா பந்து மித்திரர் முதலான
அனைவருக்கும் இதஞ்செய்வோனுய் இருப்பவன். ஆகை
யால், சகலருக்கும் உபகாரமாயிருக்கிற அருமையான
உனது தேகத்தை அற்பகாரியத்தின் பொருட்டு ஏன்
வீணுய் விடுகிருய்? இப்போது உனக்குத்தோன்றிய இந்தப்
புத்தியை விட்டுவிடு; உன் நகரத்திற்குப் போவாய்; என்
பசி நீங்கும்பொருட்டு இந்தப் பிராமணனைப் பக்ஷிப்பேன்''
என்று உரைத்த புலியின் வசனத்தை இராஜன் கேட்டுக்
கோபத்தினுற் கண்கள் சிவந்து, ''ஏ புலியே! நீ என்
முன்னே பயமின்றி, இந்தப் பிராமணனைப் பட்சித்துப்
போடுவேன் என்று சொன்னுயல்லவா? இந்த வார்த்தை
யைக் கேட்டு நான் உபேட்சையாயிருந்தால் என் வாணு
ளைச் சுடவேண்டாமோ? எனது கட்கம் என் கையிலிருந்
தால் உன்தேகத்தை இந்தக்ஷணம் துணுக்கெனத் துண்டிப்

பேன்; தெய்வ விரோதத்தால் என் கட்கத்தைக்காணேன்; ஆதலாற் றெய்வமே பலமுடையதன்றிப் புருட முயற்சி பலமுடையதன்றே.'' (கரு)

"ஏ புலியே! பஞ்சபூதவிகாரமான, இந்தத்தேகமானது இன்றைக்கோ நாளைக்கோ, அன்றி அதற்கு அடுத்த தினத்திலோ காலனாற் சங்கரிக்கப்படும். இந்தக்காரியம் என்னாற் செய்யப்பட்டது, இனி இதைச் செய்யப்போகின்றேன், இது இன்னுஞ் செய்யமுடியவில்லை, என்று இத்யாதி சிந்தைகளைப்பெற்ற மூடசீவர்களைக் காலன் தயையின்றிப் பாசத்தாற்கட்டி ஒரு க்ஷணத்தில் சங்கரித்துப்போடுகிறான். ஆதலால் புத்திமானானவன் எப்போதும் எல்லோரும் புகழும்படி தான் நற்காரியமே சாக்கிரதையாய்ச் செய்யவேண்டும். ஏனெனில் நற்காரியஞ் செய்வோருக்குச் சராமரணாதி பயம் ஒருகாலத்தும் எவ்வளவும் நேரிடாதன்றோ? ஆதலால், இவ்வனித்தமான மாமிசபிண்டமாகிய தேகத்தில் எனக்கு ஒருபோதும் ஆசையில்லை.'' (கஎ)

"அன்றியும் இந்தப் பிராமணனை நான் இரட்சியாவிட்டால் எனக்கு க்ஷத்திரியத்தன்மை கெட்டுப் போகும்; ஏனெனில் வியாக்கிர சோரராதியாற் பயந்திருக்கின்ற சீவர்களுடைய பயத்தை நீக்கி இரக்ஷிக்குந் தன்மையுடையவனையன்றோ? க்ஷத்திரியனென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். க்ஷத்திரியரெல்லாம் பயந்தோரைக் காக்கவன்றோ அஸ்திரசஸ்திரங்களைத் தரிப்பார்கள். இப்போது என் கையில் கட்கமில்லாமையினால் நீ தயவுசெய்து இந்த மறையோனை விட்டு என்னைப் பட்சிப்பாய். என்னாற் பாண்டிய குலத்திற்கு நூதனமாக ஓர் அபவாதமும் வராதிருக்கும்படி நீ என்னிடத்தில் தயவுசெய்வாய்'' என்று அரசன் சொல்ல; அதற்குப் புலி சொல்லுகின்றது.

"ஏ இராசனே! உனக்கு வெகு விதமான ஐஸ்வரியம் நிரம்பியிருக்க, இரத கச துரக பதாதிகளாகிற சேனைகளும் நிரம்பியிருக்க, சுவர்ணத்திற்குச் சமானமான காந்திபொருந்திய வெகுவித சுந்தரமாதரும் இருக்க, பின்னும் புத்திராதி சம்பத்தும் இருக்க, கிடைத்தற்கருமையான இப்போக்கியங்களை விட்டு, நீ ஏன்விருகமரிக்க இச்சிக்கிறாய்" என்று சொன்ன புலியைப்பார்த்து அரசன் சொல்லுகிறான்.

"ஆ ஆ மின்னலுக்குச் சமானமாய் அநித்தியமாய் அனந்த ஆபத்துக்கெல்லாம் இடமாயிருக்கின்ற அரசன் முதலானவர்களுடைய செல்வத்தைச் சுடவேண்டும்; உலகத்தில் எல்லோரும் புகழும்படி தான் எந்த நற்காரியஞ் செய்தாற் பிரமலோகாதி பதத்தை அடையலாமோ? அப்படிப்பட்டநற்காரியமே விவேகிகளெல்லோருஞ் செய்யவேண்டுமேயன்றி, தீங்கை ஒருகாலுஞ்செய்ய ஒண்ணாது." என்று இராசன் சொல்லி, உடனே மகாதைரியமாகத் தன்னுடைய சிரசைப் புலியின் வாயிற் கொடுத்தான். அந்த ஆச்சரியத்தைப் பார்த்து அந்தக்ஷணமே ஆகாசத்தில் நின்றும் அவ்வரசன்மேல் தேவர்கள் புட்பவருஷம் வருஷித்தார்கள். உடனே அந்தப்புலியும் பிராமணனுங் காணாமல் மறைந்துபோய்விட; இராசன் இதென்ன ஆச்சரியமென்று நினைத்து அவ்வன்னி வனத்தில் தனியே இருந்தான். (உச)

இப்படி ஸ்காந்தபுராணத்தில் க்ஷேத்திர கண்டத்திலுள்ள சமிவனமான்மியத்தின் நான்காவது அத்தியாயம் முற்றிற்று.

ஆக அத்தியாயம் நான்கிற்குச் சுலோகம் கஎ.

கோவிலூர் ஆண்டவர் நூலகம்
A. No. 2.79
R65(KOV)

## ஐந்தாவது வீரபாண்டியனுக்குத் திரிபுவனேசுவரர் பிரத்தியக்ஷமாய் அநுக்கிரகஞ் செய்த அத்தியாயம்.

பின்னர் அந்த அரசனுடைய சேனைகள் அவ்வரசனை வனங்கடோறும் தேடிக்கொண்டு வன்னிவன க்ஷேத்திரம் வந்து சேர்ந்தன. (க)

அச்சேனைகளை நிருபன் கண்டு அவ்விடத்தில் நடந்த விர்த்தாந்தங்களெல்லாம் அந்தச் சேனாசனங்களுக்குச் சொல்லி, இந்தவனத்தில் ஏதோ ஒரு மகா ஆச்சரியமிருக்கிறது; நீங்கள் சுற்றிப்பாருங்களென்று கட்டளையிட; அரசன் வசனத்தை அந்தச் சனங்கள்கேட்டு, அவ்விடத்தில் நாலுதிக்கிலுந் தேடிப்பார்க்கும்போது, ஒரு சோலையின் நடுவில் வன்னி மரத்தின் சமீபத்தில் ஒரு மகாலிங்கத்தையும் அந்த லிங்கத்தின் பக்கத்தில் இராசகட்கத்தையுங் கண்டு, உடனே சீக்கிரமாய் இராசாவினிடத்திலே வந்து, "ஏ மகாராசாவே! இந்தவனத்தில் வெகு சுந்தரமான ஓர்சோலையின் நடுவில் வன்னிமரச்சமீபத்திற் சச்சிதானந்த பூரணமாயிருக்கின்றபகவானான பரமசிவன் ஒருமகாலிங்க ரூபமாயிருக்கின்றார் அந்த மகாலிங்கத்தின் சமீபத்தில் தமது இராசகட்கமும் இருக்கிறது" என்று சொல்ல; அவ்வசனத்தை அரசன் கேட்டுப் பத்தியினால் ஆனந்த பாஷ்பமும் உரோமாஞ்சலிகளும் உண்டாய்ச் சீக்கிரமாய் அவ்விடத்திற்குவந்து அந்த உத்தமமான மகாலிங்கத்தையும் அந்த மகாலிங்கத்தின் சமீபத்திற் றன்னுடைய இராசகட்கத்தையுங் கண்டு, உடனே சீக்கிரமாய்ப் பூமியிலே தண்டம் போலே சாஷ்டாங்கமாக வணங்கி, சிரசில் அஞ்சலிசெய்து

கொண்டு மகாலிங்க ரூபமாயிருக்கிற பரமேஸ்வரனைத் துதிக்கத் தொடங்கினன். (அ)

சத்தியக் ஞானனந்தரே போற்றி, சர்வபரிபூரணரே போற்றி, சர்வ சொரூபரே போற்றி, சர்வசாட்சியே போற்றி, சர்வசக்தியுள்ளவரே போற்றி, சர்வாந்தரியாமியே போற்றி, சர்வஜனப்பிரியரே போற்றி, சர்வபலனைக் கொடுக்கின்றவரே போற்றி, சந்திரசேகரராயிருக்கின்றவரே போற்றி, விஷ்ணுவால் வணங்கப்பட்ட பாதார விந்தமுடையவரே போற்றி, மான் மழுவை உடையவரே போற்றி, சித்த வித்தியாதராராதி தேவராற் றுதிக்கப்பட்டவரே போற்றி. (கூ)

இடபக்கொடியை யுடையவரே போற்றி, திரிபுராந்தகரே போற்றி, பிரமாதிகணங்களுக்கதிபரே போற்றி. (க0)

தயாசமுத்திரமாயிருக்கின்றவரே அனுக்கிரகஞ் செய்யும், கங்காதரராய்ச் சூலபாணியராய் இருக்கின்றவரே அனுக்கிரகஞ் செய்யும், செஞ்சாந்தணிந்த கொங்கைகளையுடைய பார்வதிதேவியரைத் தழுவுகின்றவரே அனுக்கிரகஞ் செய்யும். (கக)

அனந்த முடியுடையவரே போற்றி போற்றி, அனந்த நேத்திரமுடையவரே போற்றி போற்றி, அனந்த கரமுடையவரே போற்றி போற்றி, அனந்த பாதமுடையவரே போற்றி போற்றி, அனந்தநாமமுடையவரே போற்றி போற்றி, அனந்த கீர்த்தியுடையவரே போற்றி போற்றி, அனந்த கண்களுடைய புரந்தரனல் வணங்கப்பட்டவரே போற்றி போற்றி. (கஉ)

கைலாசபதியே போற்றி போற்றி, மகா ஆனந்தத் தாண்டவ முடையவரே போற்றி, பசுபதியே போற்றி, யாவராலுந் துதிக்கப்பட்டவரே போற்றி, சடாமகுட

தாரியே போற்றி, நித்திய மங்களரே போற்றி, வேதாந்த வேத்தியரே போற்றி. (கங)

பரமாத்மாவே ஜெயஜெய, சகத்காரணரே ஜெயஜெய, தேவதேவரே ஜெயஜெய, கருணாநிதியே ஜெயஜெய, சகல லோக இரட்சகரே ஜெயஜெய, சர்வாத்மாவே ஜெயஜெய. ()

நீலகண்டரே போற்றி, கஜசரும வஸ்திரரே போற்றி, சத்தியோசாதம் வாமதேவம் அகோரம் தற்புருடம் ஈசானம் என்கிற பஞ்சமுகங்களை யுடையவரே போற்றி. (கரு)

ஏ மகாதேவரே! தம்மைச் சரணமாக அடைந்த அடியேனை இரக்ஷியும்; என்று இப்படி வெகுவிதமாய்ச் சகல லோக மங்களகரராயிருக்கின்ற பரமசிவனை வீரபாண்டிய மகாராசன் ஸ்தோத்திரஞ் செய்து, அடிக்கடி வணங்கிப் பக்தியினாற் பரவசனாயிருக்கும்போது, அநேககோடி சூரியப்பிரகாசராய் அனேககோடி சந்திர சீதளராய் இடபவாகனாரூடராய்ப் பார்வதி சமேதராய்ச் சதுர்ப்புஜராய் நீலகண்டராய்த் திரிநேத்திரதரராய்ச் சந்திரசூடராய்ச் கங்காதரராய்ச் சடாதாரியாய் மந்தகாசம்பொருந்திய முகாரவிந்தத்தை யுடையவராய்த் திவ்விய மங்கள மூர்த்தியாய்க் கருணாநிதியா யிருக்கின்ற பரமசிவன் அந்த மகாலிங்கத்தினின்றும் இராசாவின் முன் பிரத்தியக்ஷமாய்த் தோன்றி, "இராசாவே! உன்னுடைய தைரிய சௌரியாதியும் நம்மிடத்தில் உனக்கிருக்கின்ற பக்தியையுஞ் சோதிக்கும்பொருட்டு நம்முடைய மாயா சத்தியினாற் புலியினிடத்திற் பிராமணன் அகப்பட்டதாக உனக்குத் தோற்றுவித்து, இராசகட்கத்தையும் அபகரித்துக்கொண்டோம்; இப்போது அந்த இராசகட்கத்தையும் நீ எடுத்துக்கொள்" என்றுசொல்லி, அவனுக்கு வேண்டிய வரங்களெல்லாங் கொடுத்தனர். பின்பு அவ்வரசன் மிகுந்த அன்புடன் பரமசிவனை நோக்கி

ஸ்தோத்திர நமஸ்காரங்கள் செய்து, அந்த இராசகட்கத்தையும் எடுத்துக்கொண்டு வெகு சந்தோஷத்துடனே "ஏ மகாதேவரே! தேவரீர் பக்கத்தில் நின்றும் இந்த இராசகட்கத்தை நான் அடைந்ததால் இன்றைய முதல் தேவரீருக்கு இராசகட்க பரமேசுவரர் என்று நாமமும், வன்னிமரத்தடியில் உம்மைத் தரிசித்தபடியாலே இந்த க்ஷேத்திரத்துக்குச் சமிவனமென்று நாமமும், பிரசித்தமாய் விளங்கவேண்டும்" என்று பிரார்த்தித்தான். அந்தப்படியே மகாதேவர் அனுக்கிரகஞ் செய்து, அந்த மகாலிங்கத்தில் அந்தர்த்தானமாயினர். அன்றுமுதல் அந்த மகாலிங்கத்திற்கு இராசகட்க பரமேசுவரரென்று நாமமும், அந்த க்ஷேத்திரத்துக்குச் சமிவனமென்று நாமமும், பிரசித்தமாய் விளங்கிவருகின்றன. (ககூ)

பின்பு சிவபக்தருக்குள் உத்தமனான அந்த வீரபாண்டியன் பத்தியால் அந்த இராசகட்க பரமேசுவரரை அனேக விதமாய் நமஸ்கார ஸ்தோத்திரங்கள்செய்து, அவ்விடத்திலிருந்த விருக்ஷங்கள் செடிகொடிகள் முதலியவற்றைப் பரிசனங்களைக்கொண்டு வெட்டிச் சமபூமி பண்ணி, அவ்விடத்தில் முன்னமே இருந்து அசீரணமாகிய வெகுவிதமான பிராகாரமண்டபகோபுர விமானதிகளோடேகூடிய சிவாலயத்தை அனேக திரவியங்களைச் செலவிட்டு நூதனமாகப் புதுப்பித்தனன். (உ0)

அன்றியும் மகாரதங்களை உண்டுபண்ணி மகா உத்சவங்கள் நடத்துவித்தான். பின்பு அவ்வரசன் அந்த க்ஷேத்திரத்தில் சிலகாலம் வாசஞ்செய்து, தினந்தோறும் பத்தி சிரத்தையுடனே இராசகட்க பரமேசுவரரென்கின்ற அந்த மகாலிங்கத்தைப பஞ்சகௌவிய பஞ்சாமிர்தத்தாலும் இரத்தினகலசோதகங்களினாலும் ஸ்ரீருத்திரமுதலான மந்திரங்

களைக்கூறி அபிஷேகஞ் செய்து, கஸ்தூரி குங்கமப்பூ முதலிய சுகந்த திரவியங்ககளுடனே கூடிய சந்தனஞ் சாத்தி, மல்லிகை முல்லை சாதி சண்பகம் புன்னகம் பாதிரி தாமரை நீலோற்பலம் முதலிய புட்பங்களால் அலங் கரித்துக் கோமள'மான வில்வ தளங்களாலும் அறுகு முத லானவைகளாலுஞ் சகஸ்திரநாம மந்திரார்ச்சனை செய்து, அகில் சந்தனஞ் சாம்பிராணி முதலானவைகளால் தூபங் கொடுத்துப் பசுவின் நெய்யினல் ஏற்றப்பட்ட தீபாராதனை களைச்செய்து, சர்க்கரை நெய் முதலானவைகளோடு கூடிய திவ்விய அன்னங்களை நிவேதனஞ்செய்து, கற்பூர தாம்பூல மும் ஸமர்ப்பித்து, சத்திர சாமராதியான சோடச உபசா ரங்களுஞ் செய்து அநேக பிரதக்ஷிண நமஸ்கார ஸ்தோத்தி ரங்கள் செய்தான். அன்றியும் நாடோறும் வெகு உபசா ரத்துடனே சட்ரசோபேதமாய்ப் பிராம்மண போசன முஞ் செய்வித்தனன். (உசு)

இப்படித் தினந்தோறும் மதுபுட்கரணி தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணிச் சுத்த சித்தனய்ப் பஞ்சாட்சர செபபர னய் இராசகட்க மகாலிங்க பூசையும் பிராமண போசன மும் நியமமாகச் செய்துகொண்டு அந்தச் சமிவன க்ஷேத் திரத்தில் வீரபாண்டியனிருக்கும் நாளில் ஒருநாள் திரிபுவ னேசுவரரையும் திரிபுவனேசுவரியையுந் தெரிசிக்கும் பொருட்டு நாம் அந்த க்ஷேத்திரத்திற்கு வந்தோம். (உஅ)

அப்போது அவ்வரசன் தன்புரோகிதருடனே நம்மை எதிர்கொண்டு உபசரித்து அழைத்துப்போய் விதிப்படி பூஜித்து, ஸ்தோத்திர நமஸ்காரங்களுஞ் செய்து, அஞ்சலி யஸ்தனய் வணக்கத்துடனே "ஏ மகரிஷியே! தேவரீர் அடி யேனுக்கு நல்வரவாயினீர். உமது தெரிசனத்தினல் நான் கிருதார்த்தனய்ப் பரிசுத்தனகினேன். இன்றே என் ஜென்

மமும் என்குலமுஞ் சபலமாயின. இன்றே என் நேத்திரங்கள் களிப்படைந்தன.'' என்று தோத்திரஞ் செய்ய; அப்போது அரசனைப் பார்த்து நாம் இந்தப் பிரகாரம் சொன்னோம்.

"ஏ பாண்டியகுல உத்தமனான வீரபாண்டிய மகாராசனே! நீ ஜென்மாந்தரத்திற் செய்த தபோபலத்தால் திரிபுவனேஸ்வரரென்கிற நாமமுடைய இந்த மகாலிங்க ரூபியான பரமசிவனுடைய சந்நிதானத்தை யடைந்தாய்; அதனால் நீயே கிருதார்த்தன் சந்தேகமில்லை: ஏனெனில், எக்ஞம் தானம் தபசு முதலிய சற்கருமஞ் செய்யாதவர்களுக்கு அடையக் கூடாததாயும், அடைந்தவருக்குச் சகல சித்தியுங் கொடுப்பதாயும் இருக்கின்ற உத்தமமான இந்த க்ஷேத்திரத்தை நீ வேட்டை நிமித்தத்தால் அடைந்தாய்; ஆதலால் நீயே கிருதார்த்தன். (௩௫)

ஏ இராசனே! உன்னுடைய மனதிலிருக்கின்ற, சிவ பத்தி தைரிய சௌரியாதியை யறியவேணுமென்று பரமேசுவரரானவர் தமது மாயாசத்தியால் உன்னுடைய இராசகட்கத்தை ஒளித்துப் பிராமணன் புலியின் வாயில் அகப்பட்டதாய்த் தோற்றுவித்து, அந்தப் புலிக்கும் உனக்கும் உத்தரப் பிரதியுத்தரஞ் செய்வித்துப் பின்பு உன்னுடைய உறுதியான பத்தியால் உனக்குப் பிரத்தியட்சமாய்ப் பிரசாதஞ் செய்து, திரும்ப அந்த கட்கத்தை நீ அடையும்படி செய்து, உன்னுடைய பிரார்த்தனையால் இராசகட்க பரமேஸ்வரரென்கிற நாமத்தையும் அடைந்த இந்த விர்த்தாந்தமெல்லாம் நாம் ஞானதிருஷ்டியால் அறிந்தனம்.

அன்றியும், நீ தேகத்தைத் திரணம்போலே துச்சமாய் எண்ணின தைரியத்தால் மகத்தான கீர்த்தியை யடைந்தனை. (௩௬)

என்று இப்படி நாம் கூற நமது வசனத்தைச் சுத்த சித்தனான வீரபாண்டியன் கேட்டு, மயிர் கூச்செறிந்து, மிகுந்த பக்தி யுடனே இரத்தினாதிகளினாலே நன்றாகப் பூசித்து, நம்மை நோக்கி இந்த வசனஞ் சொல்லத்தொடங் கினான். (௪0)

இப்படி ஸ்காந்தபுராணத்தில் க்ஷேத்திர கண்டத்திலுள்ள
சமிவனமான்மியத்தின் ஐந்தாவது அத்தியாயம்
முற்றிற்று.

ஆக அத்தியாயம் (௫) சுலோகம் (க௪எ.)

## ஆறாவது மதுப்பிரியருக்குப் பிரமா உபநிடதார்த்தம் உரைத்த அத்தியாயம்.

வீரபாண்டியன் சொல்லுகிறான்:—ஏ ஞான யோகி களுக்குள்ளே உத்தமராயிருக்கின்ற பகவானான அகத்திய மகாரிஷியே தங்களுடைய தாசனாயிருக்கின்ற அடியேனுக் குத் திரிபுவனேஸ்வரரென்கின்ற மகாலிங்கத்தினுடைய மகி மையைத் தாங்கள் தயைகூர்ந்து சொல்லவேண்டும். இந்த மகாலிங்கத்திற்குத் திரிபுவனேசுவர ரென்கின்ற நாமமும், இந்த அம்பிகைக்குத் திரிபுவனேசுவரி, சாலிவாடீசுவரி என் கின்ற நாமங்களும் இந்தத் தடாகத்திற்கு மதுபுஷ்கரணி என்கின்ற நாமமும் பாபவிமோசனம் என்கின்ற நாமமும் இந்த ஸ்தலத்துக்குச் சாலிவாடி யென்கின்ற நாமமும் எந் தக் காரணத்தாலுண்டாயின; இவையெல்லாம் விஸ்தார மாய்ச் சொல்லவேணுமென்று இராசன் கேட்டனன். அதற்கு அகத்தியர் சொல்லிவந்ததை, நாம் கூறுவாமென்று சூதமுனிவர் நைமிசாரணியர்கட்குக் கூறுவாராகின்றார். ()

இவ்விதஞ் சொன்ன அரசன் வசனத்தைச் சர்வக்ஞ ரான அகத்தியமகாமுனிவர் கேட்டு ஒரு முகூர்த்த பரியந் தஞ் சாம்பசிவனைத் தியானம் பண்ணி, அவ்வரசன் கேட்ட தற்கெல்லாம் உத்தமமான கதையைச் சொல்லத்தொடங் கினுர். "ஏ இராசனே! யாதொரு கதையைக்கேட்டமாத் திரத்தால் பிரமகத்தியாதி மகாபாவங்களைச் செய்தவரும் அந்தப் பாவங்களினீங்கி நற்கதியடைவரோ ? அப்படிப் பட்ட ஒரு கதையைச் சொல்லுகிறேன்; கேட்பாயாக. (௫)

பூர்வம், இந்திரிய நிக்கிரகமுள்ளவரும் சகல செகத் காரணமான வஸ்துவை அறியவேணுமென்கின்ற இச் சையை யுடையவரும், மதுப்பிரியரென்கின்ற நாமத்தை யுடையவருமான ஒரு ரிஷியானவர், இந்தச் சாரசரங்கள் எந்த வஸ்துவினின்று முண்டாகி இலயத்தை யடைகின்ற னவோ? அந்தக் காரண வஸ்துவை அறிய விரும்பி உஷ்ண காலத்திற் பஞ்சாக்கினி மத்தியிலுஞ் சீதளகாலத்தில் ஜல மத்தியிலும் இருந்து, மகா கோரமான தபசை இச்சமிவன க்ஷேத்திரத்தில் மதுபுஷ்கரணி தீரத்தில் நியமமாகச் செய்த னர். (அ)

இப்படி மகா தபசைச் செய்யும்போது அதை விக்கி னம் பண்ணுகிறதற்காக இந்திரன் முதலியதேவர்கள் இடி மின்னலாதியோடே கூடிய மகா வருஷங்களையும் பயங்கர மான துர்நிமித்தங்களையும் அந்த முனிவருக்கு நான்குபக் கத்திலும் உண்டு பண்ணினுர்கள். அவைகளால் அந்தரிஷி அசைவற்றவராய்ப் பின்னும் நியமந் தவறுமல் வெகுகாலப ரியந்தம் தபசுசெய்யும்போது, அந்த இந்திராதிதேவர்கள் இந்த ரிஷியினுடைய தபசுக்குப்பயந்து பிரமதேவரிடத்திற் போய் அவரை நமஸ்காரம்பண்ணி, "ஏ பகவானே! தேவ தைகளுக்கெல்லாம் நாயகராயிருக்கின்றவரே! செகத்தின்

பீடைகளெல்லாம் நீக்குபவரே! மதுப்பிரிய ரிஷியினுடைய தபோபலத்தாற் செகத்தெல்லாம் மகத்தான பயத்தை அடைந்திருக்கின்றன. ஆதலால், அவருக்கு வேண்டிய வரத்தைக் கொடுத்தருளவேண்டும்'' என்று பிரார்த்தித்தார்கள். (௧௨)

அதற்குப் பிரமதேவர் சொல்லுகிறார்:—"ஏ தேவதைகளே! நீங்கள் பயப்படவேண்டாம், நிர்மல மனசான இந்த ரிஷியினுடைய அபிப்பிராயம் நமக்குத் தெரியும், நீங்கள் உங்கள் உலகத்திற்குப் போகக் கடவீரென்று போக்கிவிட்டு, இந்த விர்த்தாந்தத்தை விஷ்ணுவுக்கும், உருத்திரருக்குந் தெரிவித்து அவர்களிருவருடனே மதுப்பிரியர் தபசு செய்கின்ற வன்னி வனத்திற்குவந்து, மதுப்பிரியரைப் பார்த்துச் சொல்லுகின்றார். (௧௪)

"ஏ மகா தவம் பொருந்திய மதுப்பிரியரே! உமது தபவிசேடத்தால் நானேயன்றி விஷ்ணுமூர்த்தியும், உருத்திரமூர்த்தியும் சந்தோஷம் அடைந்தனர். உமக்கு வரந்தரவேண்டி இதோ வந்தனம். வேண்டிய வரத்தைக் கேளும்'' என்று சொன்ன பிரமதேவர் வசனத்தை ரிஷி கேட்டு, திரிமூர்த்திகளையும் தருசித்து வணங்கி, வேதங்களால் வெகுவாகத் துதித்து, அஞ்சலி செய்துகொண்டு சந்தோஷத்துடனே சொல்லுகின்றார். (௧௭)

"ஏ சுவாமிகாள்! நீங்கள் என் தபசாற் சந்தோஷம் அடைந்தீரேயாகில், நான் செய்த தபசிற்குப் பலமுள்ளபடி நான் வேண்டிய வரத்தைக்கொடுத்தருள வேண்டும்; அதேதென்னில், நான் சகல செகத்தின் காரணமான தெய்வத்தை அறியவேணுமென்று இச்சிக்கின்றேன்; உங்கள் மூவர்களுக்குள்ளே செகத் காரணர் யார்'' என்று ரிஷி கேட்க, பிரமா சொல்லுகிறார். "ஏ முனியே! நாங்கள் மூவ

ரும் பிரமன் விஷ்ணு உருத்திரரென்கிற நாமம் உடையவர்கள்; பிரமனுகிய யான் சிருஷ்டியினும், விஷ்ணுவாகியவிவர் திதியினும், உருத்திரனுகியவவர் சங்காரத்தினும் கிரமமாய் அதிகாரிகள் ஆகின்ருேம்; ஆதலால், நாங்கள்மூவரும் செகத் காரணர்'' என்று சொன்னுர். (௨0)

இந்த வசனத்தை ரிஷி கேட்டு, "ஏ பிர்ம்மாவே இந்திராதிகள் அஷ்டதிக்குக்களுக்கு அதிகாரிகளானுற்போல, நீங்கள் மூவருஞ் செக உற்பத்தி திதி லயங்களுக்கு அதிகாரிகளென்று உமது வசனத்தால் நான் அறிந்தேன். இப்படி ஒவ்வொரு கிருத்தியத்தில் அதிகாரிகளாயின், உங்களை அறிந்து எனக்கு என்ன பிரயோசனம். (௨௧)

யாதொரு வஸ்துவானது, உங்கள் மூவருக்கும் அதிகாரத்தைக் கொடுத்ததோ? யாதொரு வஸ்துவினுடைய பயத்தாற் றினந்தோறும நியமப்படி நீங்காமற் சூரியன் தகிக்கின்ருனே? வாயுச்சலிக்கின்ருனே? அக்கினி சொலிக்கின்ருனே? தேவேந்திரன் மழை வருஷித்தல் முதலிய செய்கையைச் செய்கின்ருனே? மிருத்து சங்கரிக்கின்ருனே? யாதொரு வஸ்து செகச் சென்மாதி காரணமென்றும், யாதொரு வஸ்து பரப்பிரமமென்றும், உபநிடதங்கள் கோஷிக்கின்றனவோ? அத்தகைய பெருமை வாய்ந்த செகன்மூலகாரணப் பிரமத்தையே நான் அறிய இச்சையுள்ளவனே யன்றி, உங்களை அறிய எனக்கு இச்சை இல்லை; என்று சொல்லினர். அந்த வசனத்தைத் திரிமூர்த்திகளுங் கேட்டு, நீறிய இச்சித்தவஸ்து நாங்கள் அல்லவென்று சொல்லித் தம்தம் லோகத்தை அடைந்தார்கள். (௨௪)

பின்பு, அந்த ரிஷியானவர் சமிவனத்தில் மகாவுக்கிரமான நியமத்துடனே மிகுந்த தீவரமான தபசைச் செய்தனர். அவருடைய தீவர தபாக்கினியானது செகத்தெல்

லாம் வியாபித்து தாபத்தை யுண்டாக்கும்போது, திரும்பவும் இந்திராதி தேவதைகள் பிர்மாவைச் சரணமாக அடைந்து, "ஏ பிர்மாவே! மதுப்பிரியரிஷியானவர் ஆகாரமின்றி, உசுவாசநிசுவாச மின்றி, வெகு தீவிரமானதபசைச் செய்கிறார். அந்தத் தபாக்கினியானது செகத்தையெல்லாம் மிகவுந் தகிக்கின்றது" என்று சொன்னார்கள். (உஎ)

இந்த வசனத்தைப் பிரமதேவர் கேட்டவுடனே அன்னவாகனத்தி லேறிக்கொண்டு சீக்கிரமாய் மதுபுட்கரணி தீரத்திற்கு வந்து அந்த ரிஷியைப் பார்த்து, "ஏ மதுப்பிரியரே! சகலசெகத்தையுந் தகிக்கும்படியாகத் தீவர தபசு செய்ததுபோதும்; உபநிடத்துக்களாற் போதிப்பிக்கப் படும் யாதொரு பரப்பிரமத்தை நீர் அறிய இச்சிக்கின்றீர், அந்த இச்சை இப்போது நிறைவேறும்படி யாம் ஒருபாயத்தைச் சொல்லுகிறோம்; அதேதென்னில் "பிரமவித்தை ஒன்றே அந்தப் பரப்பிரமத்தை அறிகின்றதற்குச் சாட்சாது உபாயமாம். (௩எ)

யாதொரு பரப்பிரமத்தை எக்ஞம் தானம் இதமிதம் மேத்தியமான பொசிப்பு தபசு முதலான நிட்காம கர்மங்களாற் சித்த சுத்தி பெற்றவர்களே பிரமவித்தையின் வழியாக அடைவார்கள். அஃதில்லாதவர்கள் அடையமாட்டார்கள். அந்தச் சச்சிதானந்த பரிபூரண பரமாத்துவித பிரத்திய கபின்ன பரப்பிரமத்தை அறிவதற்குப் பிரமவித்தையே முக்கியமான உபாயம்." (௩௨)

என்று சொல்லப்பட்ட பிரமதேவர் வசனத்தை அந்த மதுப்பிரிய மகாரிஷி கேட்டு, மிகவுஞ் சந்தோஷத்துடனே பத்தியால் விதிப்படி பிரமதேவரைப் பூசித்து, "ஏ பிரமதேவரே! நான் செய்ததபசு பலமுள்ளதாகில் அந்தப் பரமசிவ சொரூபத்தை அறியும் படியான பிரமவித்தையைத்

தாங்களே குருவாய் அடியேனுக்கு உபதேசம் பண்ண வேண்டும்'' என்று சொன்னார். அந்த வசனத்தைப் பிர்மா கேட்டு, லோகானுக்கிரக நிமித்தமாய் அந்தரிஷிக்கு முன்னம் பஞ்சாட்சர மகாமந்திரத்தை உபதேசித்துப் பின்பு உபநிடத்துக்களுக்கு அர்த்தமான பரப்பிரமத்தை உண்மையாக உபதேசித்தார். (௩௫)

என்று இப்படிச் சொல்லிவரும் அந்த அகஸ்திய மகா ரிஷியின் வசனத்தைச் சைமினி மகாரிஷி கேட்டு வணங்கி, "ஏ பகவானுன அகஸ்திய மகா ரிஷியே! பூர்வம் பிர்மாவினுல் மதுப்பிரிய ரிஷியின்பொருட்டு உபதேசிக்கப் பட்ட பரப்பிரம சொரூபத்தைத் தாங்கள் எனக்குத் தெரிவிக்கவேண்டும்'' என்று கேட்டார். (௩௬)

" மதுப்பிரியருக்குப் பிர்மா சொன்னபிரகாரமாய் அகஸ்தியமகாரிஷி சைமினிக்குச் சொல்லுகின்ருர்.'' "ஏ மதுப்பிரியரே! யாதொரு வஸ்துவானது சிருட்டி ஆரம்பசமயத்திற் றன்னுடைய மாயா சத்தியினுல் முன்னம் ஈஸ்வரரூபமாகி ஆகாசாதி பூதபௌதிகப் பிரபஞ்சத்தைச் சிருட்டித்தும், பின்பு சீவரூபமாய் அந்தப் பௌதிக சரீரங்களிற் பிரவேசித்துக் கர்த்துரு போக்காதி ரூபங்களாகத் தோற்றுகின்றதோ? அந்த வஸ்துவே பரப்பிரமம். அதுவே பரமசிவசொரூபமென் றறியக்கடவை. (௩௭)

பஞ்சகோச விலட்சணமாய், சரீரத்திரய வெதிரிக்தமாய், அவஸ்தாத்திரய சாக்ஷியாய், சசாதீய விசாதீய சுவகதபேத ரகிதமாய், தேச கால வஸ்து பரிச்சேத சூனியமாய் இருக்கின்ற சத்தியக்ஞானனந்த அகண்ட வஸ்துவே பரப்பிரமம் ; அதுவே பரமசிவசொரூபமென் றறியக் கடவை. சச்சிதானந்த ரூபமாய் பிரத்தியகாத்மாவான யாதொரு வஸ்துவானது தனது சந்நிதான மாத்திரத்தாற்

சட்சுவாதி இந்திரியங்களை ரூபாதி விடயங்களிலே எப்போதும் நியமமாக ஏவுவிக்கின்றதோ? யாதொரு வஸ்துவால் இந்த நானுவித நாமரூபமான செகத்தும் ஆகாசம்போல வியாபிக்கப்பட்டிருக்கிறதோ, அந்தவஸ்துவேபரப்பிரமம்; அதுவே பரமசிவசொரூபமென்றுஅறியக்கடவை.

இப்படிப் பரமசிவசொரூபம் எல்லாருக்கும் ஆத்மாவாய் எங்குப் பூரணமாயிருந்தால் எல்லாரும் பரமசிவசொருபத்தை ஏன் அறியவில்லை யென்னில், சுயம்புவான அந்தப் பரமசிவன் சிருட்டியாதியில் மனமுதலான இந்திரியங்களைப் பகிர்முகமாகச் சிருட்டித்தபடியால், அந்த இந்திரியவசத்தராகி, பகிர்முகமான சீவர்களெவ்வொருவருஞ் சர்வாந்தரரா யிருக்கின்ற பிரத்திய கபின்னமான பரமசிவத்தை யறியவில்லை. ஆனால், அந்தப் பரமசிவசொரூபமானது ஒருவரும் ஒருகாலத்தும் அறியத் தக்கதன்றோ என்னில், எப்போது எந்தப் புருடன் தானே சென்ம புண்ணிய புஞ்ச பரிபாகத்தாற் சித்த சுத்தி உண்டாய் விஷய விரக்தனுகி அதி தீவரமான மோட்ச விச்சையுள்ளவனுய் அந்தப் பகிர்முகமான மனதுமுதலிய இந்திரிய பரவசனுகாமல் நதியில் எதிர்த்து நீஞ்சுகின்றவன்போல மகா தீரனுகி, அந்தர்முக மாகிறுனே, அப்போதவன் சர்வாந்தரமான பிரத்தியகபின்ன பரமசிவத்தைக் கரதலாமலகம்போல யாதொரு பிரதிபந்தமின்றியே அறிவன். (௩௯)

இப்படி அறிந்தோர்கள் அனுபவம் ஏதென்னில், சிருட்டி கர்த்தாவாயும், சிருட்டிக்கப்பட்ட செகத்தாயும், பாலன கர்த்தாவாயும், பாலிக்கப்பட்ட செகத்தாயும், சங்கார கர்த்தாவாயும், சங்கரிக்கப்பட்ட செகத்தாயும், மற்றெவ்விதத் தோற்றமாயுமிருக்கின்ற சீவேஸ்வர செகத்தணைத்தும், அகண்ட சச்சிதானந்த பரிபூரண பரமாத்து

விதமான பரமசிவ சொரூப மென்று தோன்றப்பெறு வதேயாம். (௪௦)

இந்தப் பரமசிவ சொரூபத்தை முமூட்சு அறியும் வகை எவ்விதமென்னில், ஆத்மாவை நாயகனுக வுடையதா யும், புத்தியைச் சாரதியா யுடையதாயும், மனதாகிய கடிவாளம் பூட்டிய இந்திரியங்களைப் பரிகளாகவுடையதாயுமிருக்கின்ற இச்சரீரமான இரதமானது, இவ்விந்திரியப் பரிகளால் வெகுவித விஷயமாகிய வனபூமியிற் சஞ்சரிக்கின்றபடியால், முமூட்சுவானவன் ஞானசாத்திர சென்னிய விவேக புத்தியாகிய சாரதியால் அவ்விஷய வனபூமியிற் செல்லாநின்ற இந்திரியக் கொடும் பரிகளை ஆத்ம பூமியிற் றிருப்பி நிரந்தரம் ஆத்மநிஷ்டையை அடைவதே அந்தப் பிரத்தியகபின்ன பரமசிவ சொரூபத்தை அறியும் வகையாம். (௪௧)

அந்தப் பரமசிவத்தின் சொரூபமாவது ஏதெனில், சுயம்பிரகாச சித்ரூபமே அதன் சொரூபம். அது அவ்விடத்தில் எவ்விதமாயிருக்கின்றதென்னின், எல்லாப்பூதங்களிடத்திலும் எல்லாவற்றிற்கும் ஆந்தரமான ஆத்மாவாயிருக்கின்றது. இப்படியிருந்தால் அது எல்லோருக்கும் ஏன் தோன்றவில்லை யென்னில், சூட்சுமமாய்ப் பஞ்சகோசங்களால் மறைக்கப்பட்டிருத்தலாற் றோற்றவில்லை. ஆனுல் அது பரிச்சின்னமோ வெனில், ஆகாசம் போல் எங்கும் வியாபியானதாற் பரிச்சின்னமல்ல. இச்சொரூபந் திரிமூர்த்திகளுக்குள் ஒன்றோவென்னில், சர்வ கர்மங்களுக்கும் பலத்தைக் கொடுப்பதாயுஞ் சர்வபூத அதிஷ்டானமாயுஞ் சர்வசாட்சி சித்ரூபமாயும் அத்துவிதமாயும் இருக்கின்றது. பரப்பிரமமானதால் மும்மூர்த்திகளுக்குள் ஒன்றன்று. பின்னையோவெனில், அவித்தை மாயைஎன்

கின்ற இருவித உபாதியுமன்றித் தத்துவம்பத இலக்கியார்த் தமாய்க் கேவலமாய் நிர்க்குணமாய் நித்த சுத்த புத்தமா யிருக்கின்ற அகண்ட சிதாகாசமே பரமசிவ சொரூபமா கும். (சஉ)

இவ்விதமான பரமசிவ சொரூபத்தை அறிந்தோருக்குப் பிரயோசனம் ஏதெனில், யாதொரு அதிகாரி அகண்டபரம சிவசொரூபமே நானென்று யாதொருபிரதிபந்தம் அன் றியில் அபரோட்சமாக அறிகிருனே, அவனுக்குப் போக்தா போக்கியம் போகமென்கின்ற இவை முதலிய திரிபுடி யில்லாததினுலும், சகலமும் அகண்ட பரசிவமான தன் சொரூபமென்று தோற்றுவதாலும, சகல சரீர தாபமு நீங்கி நிரதிசயானந்தம் அடைவதே பிரயோசனம் அன்றி யும் பிரத்தியகபின்னமான அப்பரமசிவத்தைச் சாட்சாத் காரமாய் அறிந்தால், ஆத்மாவுக்கும் அகங்காரத்துக்கும் இருந்த அன்னியோன்னியாத்தியாசமாகிய இருதயக்கிரந்தி நீங்குவதும் வேதார்த்தம் துவி;மோ? அத்துவிதமோ? அத்துவிதமானுலும் அது அனுபவத்துக்கு வருமோ? வாராதோ? என்கின்ற இவை முதலான சகல சந்தேகங்கள் நீங்குவதும், சஞ்சிதம் பிராரத்தம் ஆகாமியமென்கிற கரு மத்திரயம் நீங்குவதும் பிரயோசனமாகும். (சச)

பிரத்தியட்சமாய் நாஞவித நாமரூபமாகத் தோற்றிய துவிதப்பிரபஞ்சமெல்லாம் அகண்ட சச்சிதானந்த பரி பூரண பரமாத்துவிதமான பரமசிவ சொருபமாவது எவ் விதமெனில், உபாதான காரணமாகின்ற ஒரு மண்ணே நாஞவிதமான கடகலசாதி காரியமாகிறது போலவும், அதிட்டானமான ஒரிரச்சுவே சர்ப்பந் தண்டம் மாலை முதலிய ஆரோபமாய் விவர்த்திக்கின்றதுபோலவும், சர் வோபாதான காரணமாயுஞ் சர்வாதிட்டானமாயு-மிருக்

கின்ற ஒருபரம சிவமே சுர நர திரியக்காதி ரூபமான நாஞ வித நாமரூப செகத்தாகத் தோன்றுகின்றபடியால், விசாரிக்குமிடத்தில் கட கலசாதி காரியமானது காரணமான மண்ணுகின்ருற் போலவும், சர்ப்பமுதலிய வாரோபம் அதிட்டான இரச்சுவாகின்ருற் போலவும், சீவேஸ்வர செகத்தாய்த் தோற்றிய நாஞவித நாமரூப செகத்தும் அகண்ட பரிபூரண சச்சிதானந்த பரமாத்து வித பரமசிவ சொரூபமேயாகும். (சரு)

இப்படிப் பரமார்த்தத்திற் சகல செகத்தும் அகண்ட சிதாகாசமான அத்வைத பரமசிவ சொரூபமா யிருந்த போதிலும், இவ்வுண்மை அறியாதோருக்கு (அந்தகருக்குப் பகலில் சூரியோதயத்தாற் பிரகாசம் பொருந்திய செகத்து அப்பிரகாசமாய்த் தோற்றுவதுபோல) அகண்ட பரமாத்துவிதமான பரமசிவ சொரூபமே சீவேசுர செகத்தான துவைதம்போலத் தோன்றும். (சசு)

இப்படி அவிவேக திருஷ்டியிற் சொரூபமே நாஞவித சரீராதிகளாய்த் தோற்றினபோதிலும் விவேகியானவன் அநித்தமான சரீரமுதலிய நாஞவித உபாதிகளை நேதி நேதி என்கின்ற வாக்கால் அபவாதித்து, மிஞ்சிய அகண்ட பரிபூரண பரமசிவமே தானென்று அபரோட்சமா யறிந்தாற் சகல சோகமுநீங்கி, அச்சொரூபமாகவே மிஞ்சுவன். (சஎ)

அப் பரமசிவம் சர்வ பூரணமானதால் அஞ்ஞானத்துடனும்அதன் காரியத்துடனுஞ்சம்பந்தப்படுமோ எனில், சொரூபம் ஆகாசம்போல நிரவயவமாய் நிர்க்குணமாய் நிட்கிரியமாய் நிருவிகாரமாய் நிருமலமாய் நிர்ச்சங்கமா யிருக்கின்றபடியால், அஞ்ஞானத்துடனும் அஞ்ஞான காரியத்துடனும் கூடினபோதிலும் அவைகளுடன் சம்பந்தப்படவில்லை. (சஅ)

அந்தப் பரமசிவ சொரூபம் எப்படிச் சர்வபரிபூரண மெனில், விடயங்களினும் இந்திரியங்கள் வியாபகம், அவை களினும் மனது வியாபகம், அதனினும் புத்திவியாபகம், அதனினும் விசேட வகங்காரம் வியாபகம், அதனினும் சாமானிய அகங்காரம் வியாபகம், அதனினும் அவ்வியத்த மென்கின்ற அஞ்ஞானம் வியாபகம், அதனினும் பரமசிவ சொரூபம் வியாபகம். அப்பரமசிவ சொரூபத்துக்குமேல் வியாபகம் யாதொன்று மில்லை. ஆனதால் சொரூபஞ் சர்வ பரிபூரணமாகும். (ருo)

இவ்விதமாகிய பரமசிவ சொரூபத்தைத் தன்வடிவாக அறியாமல் வேருயறிகின்றவனுக்கு ஒருகாலத்துஞ் சோக மோக சம்சார பயம் நீங்கத் தக்க தல்லை. அவ்வகண்ட பரசிவசொரூபமே யெல்லாம், அதுவே நானென் றறிந்தவ னுக்குச் சோகமுமில்லை, மோகமுமில்லை, யாதொரு சம்சார பயமுமில்லை. (ருக)

ஏ மதுப்பிரியரே! இப்படிப் பிரமவித்தையைச் சாதன சதுஷ்டய சம்பன்னனுன அதிகாரியானவன் முன்னமே சற்குருமுகமாகச்சிரவணம்பண்ணி நன்ருயறிந்துகொண்டு, பின்பு சுருதிக்கனுகூலமான யுத்தியால் நிரந்தரம் மனனம் பண்ணிப் பின்பு சிரவண மனனங்களால் நிச்சயித்தபடி அகண்ட பரிபூரண சச்சிதானந்த பரமசிவசொரூபமே நான், நானே அச்சொரூபமென்று தயில தாரைபோல் இடைவிடாமல் செய்யப்பட்ட அந்தரங்க சாதனமான நிதித்தியாசனம்பண்ணினுல், அந்தப்பரமசிவசொரூபத்தை அஞ்ஞான சமுசய விபரீதம் ஒன்றும் இன்றியே கரதலாம லகம்போல அபரோட்சமாயறியலாம். (ருஉ)

இவ்விதமான நிர்க்குண பர சிவ சொரூப ஞானத்திற் குச் சகுண பரமசிவோபாசனையுஞ் சாதனமாதலால், நிர்க்

குண பரசிவஞானம் வரும் வரையில் முமுட்சுவானவன் பக்தியுடனே விபூதி உருத்திராக்கந் தரித்துக்கொண்டு பஞ் சாட்சர செபபரனுய்ச் சகுண பரமசிவனுடைய பூசனை ஸ்தோத்திரந் தியான முதலான உபாசனையுஞ் செய்ய வேண்டுமென்று இப்படிப் பிரமதேவரானவர் மதுப் பிரிய ருக்குப் பிரம வித்தையை உபதேசித்துச் சகலதேவராலுந் துதிக்கப்பட்டவராய்த் தம்முடைய சத்தியலோகத்தை அடைந்தனர். (ருச)

பின்பு அந்தரிஷியானவர் பிரமதேவர் உபதேசித்தபடி விபூதி உருத்திராக்கங்களைத் தரித்துக்கொண்டு தினந்தோறும் ஆதரவுடனே சர்வசெகத்துஞ் சச்சிதானந்த பரிபூரண பரமசிவம், அப்பரமசிவமே நானென்று நிரந்தரமனன நிதித்தியாசனஞ் செய்துகொண்டிருக்கும்போது, சர்வக்ஞ ராய்ச்சர்வசத்திமானுய்ச் சச்சிதானந்த பரிபூரணராய்ப் பக் தசனப் பிரியராய்ப் பரம தயாளுவாயிருக்கின்ற பகவானுன ஸ்ரீ பரமசிவனுனவர் கோடி சூரியப் பிரகாசம் போன்ற காந்தியை யுடைத்தாயும், சித்த வித்தியாதரர் முதலான சகலதேவதைகளாற் சூழப்பட்டதாயும், பஞ்சாட்சரவடிவ மாயும், நான்குவேதங்களையும் நான்கு சிகரங்களாயுடை யதாயும், பிரணவத்தைநடுச்சிகரமாயுடையதாயும், மற்றுஞ் சகல இலட்சணங்க ளுடையதாயு மிருக்கின்ற நிருமலமான திவ்விய விமானத்தி லெழுந்தருளி, மகா கைலாசத்தில் நின்றும் பூமியிலிருக்கின்ற சமிவன க்ஷேத்திரத்தில் மதுப் பிரியர்முன்னே காருண்ணியசித்தராய்ப் பிரத்தியட்ச மாயினர். (ருஎ)

பின்பு அந்தரிஷியானவர் சச்சிதானந்த பரிபூரண ராய்ச் சர்வாத்மக சொரூபராய்ச் சகலசெகன்னுயகராய்ச் சந்திரசூடராய்த் திரிநேத்திரராய்க் காளகண்டராய்ச்

சதுர்ப்புசராய்ப் பார்வதிசமேதராய்ப் பிரமவிஷ்ணு உருத்திராதிகளால் உபாசிக்கப்பட்டவராய்ப் பத்தர்களுடைய சகல துக்கமும் போக்கப்பட்டவரா யிருக்கின்ற பரப்பிரமமான பரமசிவனை அந்த விமானத்திற் பிரத்தியட்சமாய்க் கண்டு, மிகுந்த பத்தியுடனே அனந்த நமஸ்காரம் பண்ணிப் பரவசராய்த் தோத்திரஞ்செய்யத் தொடங்கினர். (ருகூ)

இப்படி ஸ்காந்தபுராணத்தில் க்ஷேத்திரகண்டத்திலுள்ள சமிவனமான்மியத்தில் ஆறவது அத்தியாயம் முற்றிற்று.

ஆக அத்தியாயம் கூ-க்குச் சுலோகம் உ0கூ

---

## ஏழாவது மதுப்பிரியர் பரமசிவனைத் துதிக்கும் அத்தியாயம்.

மதுப்பிரியமகாரிஷி சிவபெருமானை நோக்கிப் பிரக்ஞானகன சொரூபராயிருக்கின்றவரே அனுக்கிரஞ்செய்யும்! தேசோமயராயிருக்கின்றவரே அனுக்கிரகஞ்செய்யும்! சர்வ சாட்சியா யிருக்கின்றவரே அனுக்கிரகஞ்செய்யும்! சகலத்துக்கு மேலாகின்றவரே அனுக்கிரகஞ் செய்யும்! சர்வமூர்த்தியா யிருக்கின்றவரே அனுக்கிரகஞ் செய்யும்! சர்வோபாதியும் நீங்கிய நிர்க்குண ரூபராயிருக்கின்றவரே அனுக்கிரகஞ்செய்யும்! (க)

சரணமா யடைந்தாருடைய துன்பமெல்லா நீக்குவிக்கின்றவரே அனுக்கிரகஞ்செய்யும்! திரிபுரசங்காரஞ் செய்தவரே அனுக்கிரகஞ்செய்யும்! பிரணவப் பொருளாகின்றவரே அனுக்கிரகஞ்செய்யும்! வேதங்களாற் றுதிக்கப்பட்டவரே அனுக்கிரகஞ்செய்யும்! அனுக்கிரகஞ்செய்யும்!! (உ)

யாதொரு வஸ்துவினின்றுஞ் சிருட்டியாதியிற் சகல செகத்து முண்டாகிப் பிரளயகாலத்தில் அந்தச் செகத்து

யாதொரு வஸ்துவினிடத்தில் இலயிக்கின்றதோ, அப்படிப்பட்ட சருவோபாதான வஸ்துவான உமக்கு நமஸ்காரம்! (ங)

பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசமென்கின்ற பஞ்சபூதமும் யாதொரு வஸ்துவின் வடிவோ, அப்படிப்பட்ட சர்வகாரிய ரூபமான உமக்கு நமஸ்காரம்! (ச)

சரஸ்வதி சமேதரான பிரமாவாயிருந்துகொண்டு ஆகாசாதிப் பிரபஞ்சத்தைச் சிருட்டியாநின்ற உமக்கு நமஸ்காரம்! (ரு)

இலக்குமி சமேதரான விஷ்ணுவா யிருந்துகொண்டு அந்தச் செகத்தையெல்லாம் இரட்சியாநின்ற உமக்கு நமஸ்காரம்! (சா)

கௌரி சமேதரான உருத்திரரா யிருந்துகொண்டு அந்தச் செகத்தையெல்லாம் பிரளயகாலத்திற் சங்கரியாநின்ற உமக்கு நமஸ்காரம்! (எ)

மகாப் பிரளயத்தில் மகா காலருத்திரரா யிருந்துகொண்டு தேவதைகள் முதலான சகல செகத்தையும் பட்சித்து மகாதாண்டவம் புரிகின்ற உமக்கு நமஸ்காரம்! (அ)

துவாதசாதித்தர்கள் ஏகாதச ருத்திரர்கள் அஷ்டவசுக்கள் சத்தமருத்துக்கள் அக்கினி சித்தர் சாத்தியர் பிதிர்க்கள் இவர் முதலான தேவர் நரர் திரியக்காதியான சகலசெகத்தும் யாதொருவஸ்துவின் வடிவோ, அப்படிப்பட்ட சர்வான்மாவான உமக்கு நமஸ்காரம்! (கூ)

தேவரீருக்குப் பிரமவிஷ்ணு உருத்திராதிநாமங்களும் அதற்குரிய ரூபங்களும் விவகாரத்திற் கற்பிதங்களே; பரமார்த்தத்தில் ஒருநாமமும் ஒருருவமுமில்லையே; அப்படிப்பட்ட அகண்ட சின்மாத்திரமான உமக்கு நமஸ்காரம்! ()

# சமிவனக்ஷேத்திர மான்மிய வசனம்.

சர்வாதிஷ்டானமான யாதொரு வஸ்துவின் சத்தினுலே அசத்தான செகத்தெல்லாஞ் சத்துப்போலிருக்கின்றதோ, யாதொரு வஸ்துவின் சித்துத்தன்மையினுலே செடமான செகத்தெல்லாஞ் சித்துப்போல் விளங்குகின்றதோ யாதொரு வஸ்துவின் ஆனந்தத்தாற் றுக்கரூபமான செகத்தெல்லாம் ஆனந்தம்போலத் தோற்றுகின்றதோ, அப்படிப்பட்ட அகண்ட சச்சிதானந்த ரூபரான உமக்கு நமஸ்காரம்! (கக)

நிஷ்களரே போற்றி! நிஷ்கிரியரே போற்றி! நிருவிகாரரே போற்றி! நிரஞ்சனரே போற்றி! நிராகாரரே போற்றி! நிர்த்தொந்தரே போற்றி! நிர்ச்சங்கரே போற்றி! நிஷ்பிரபஞ்சரே போற்றி! சந்திரசேகரரே போற்றி! கங்காதரரே போற்றி! திரிநேத்திரரே போற்றி! காளகண்டரே போற்றி! சதுர்ப்புயரே போற்றி! பினகபாணியே போற்றி! தேவதேவரே போற்றி! மகாதேவரே போற்றி! பசுபதியே போற்றி! பத்தர் அபீஷ்டத்தைக் கொடுக்கின்றவரே போற்றி! (கஉ)

என்றிப்படி மதுப்பிரிய மகாரிஷியானவர் மிகுந்த பத்தியுடனே கேவல சின்மாத்திரமா யிருக்கின்ற மகாதேவரை வெகுவிதமாய் ஸ்துதித்துச் சரீரமெல்லாந் தூளி படியும்படி அட்டாங்கமாக அனேக நமஸ்காரஞ் செய்தும், ஆனந்தபாஷ்பத்தினுலே நனைக்கப்பட்ட அங்கத்தை யுடையவராய் அஞ்சலி செய்துகொண்டு பகவானுன சாம்பமூர்த்தியை நோக்கிப் பிரார்த்திக்கிறுர். (கங)

ஏ மகேஸ்வரரே! ஏ மகாப்பிரபுவே! ஏ சகல தேவாதிபதியே! பிரமாதிகளால் வணங்கப்பட்ட சரணுரவிந்தமுடையவரே! சந்திர சூரிய அக்கினியாகிய திரிநேத்திரமுடையவரே! பத்தர்களுடைய துக்கத்தை யெல்லாம்

போக்கின்றவரே! திவ்விய மங்கள மூர்த்தியா யிருக்கின்ற மகாதேவரே! அடியேன் தேவரீரது சரணார விந்தத்தைத் தானே எப்போதுஞ் சரணமா யடைந்திருக்கின்றேனுகை யால், தேவரீர் அடிமையான என்னிடத்தில் மிகுந்த கிருபை செய்தருளவேண்டும். (கச)

சத்திய ஞானனந்த பரிபூரணமாய் வாக்கு மனசுக் கெட்டாதவரா யிருக்கின்ற தேவரீர் கருணையாற் பத்தா னுக்கிரக நிமித்தமாய்த் தெரிசனமாத்திரத்தால் மோட்சத் தைக் கொடுக்கும்படியே அங்கீகரித்த திவ்விய மங்கள மூர்த்தியை அடியேன் தெரிசித்ததாற் கிருதார்த்த னுயி னேன் கிருதார்த்தனுயினேன், பரிசுத்தனுயினேன் பரி சுத்தனுயினேன், தன்னியனுயினேன் தன்னியனுயினேன். அடைய வேண்டிய பூரணனந்தத்தையும் அடைந்தேன் அடைந்தேன். (கரு)

ஏ சாம்பமூர்த்தியான பரமசிவமே! இந்த வன்னிவன க்ஷேத்திரத்தில் முன் சொல்லிய சகல இலட்சணமும் பொருந்திய பஞ்சாட்சர மயமான இந்த விமானத்திற் றேவ ரீர் மகாலிங்க சொரூபமாய் அம்பிகையுடனே எல்லோருக் கும் எப்போதும் எல்லா அபீஷ்டமுங் கொடுக்கும் பொருட்டு நிரந்தரம் வசித்தருள வேண்டும். அன்றியும், மதுப்பிரியரென்கிற நான் இந்த க்ஷேத்திரத்தி லிருக்கின்ற இந்த நதி தீரத்தில் இந்தப் புட்கரணியின் கரையிற் றபசு செய்து, தேவரீரது அனுக்கிரகத்தால் வேண்டிய சித்தியை அடைந்தபடியால், என்னுடைய நாமத்தை முன்னிட்டு இந்த நதிக்கு மதுநதி என்றும், இந்த புட்கரணிக்கு மதுபுஷ் கரணி என்றும் நாமங்கள் செகத்திற்பிரசித்தமாய் விளங்க வேண்டும். இந்த மதுநதியிலும் மதுபுட்கரணி தீர்த்தத்தி லும் மிகுந்த சிரத்தையுடனே ஒருகாலாகிலும் எவர்களே

னும் ஸ்நாநம்பண்ணித் தேவரீரைத் தரிசித்தால் அவர்கள் இகத்திற் சகல போகத்தையும் புசித்து அந்தத்தில் உம்முடைய பதத்தையும் அடையவேண்டும். திரிபுவனேசுவரராயிருக்கின்ற தேவரீர் எனக்கு இந்த க்ஷேத்திரத்திற் பிரத்தியட்சமாய்விளங்கி அனுக்கிரகஞ் செய்ததாற் பத்தானுக்கிரகநிமித்தம் இந்த வன்னிவன க்ஷேத்திரத்தில் மகாலிங்கரூபராயிருக்கின்ற உமக்குத் திரிபுவனேஸ்வரரென்கிற நாமமும், அம்பிகைக்குத் திரிபுவனேஸ்வரி என்கின்ற நாமமும் திரிலோகத்திலும் பிரசித்தமாய் விளங்கவேண்டும் என்று பிரார்த்தித்தார். அந்தப்படியே பரமசிவனும் அனுக்கிரகஞ் செய்தார். (உக)

அன்றுமுதற் சர்வாத்மாவா யிருக்கின்ற பரமசிவன் தன்னை வணங்கிய அன்பர்களுடைய துன்ப மெல்லாந் தீர்த்து, அவர்களுக்குவேண்டிய அபீஷ்டங்களைக் கொடுக்கிறதற்காக அந்த க்ஷேத்திரத்தில் மதுபுட்கரணி தீரத்தில் மகாலிங்க ரூபமாய்த் திரிபுவனேஸ்வரியுடனே வசிக்கிறார். அந்த மகாலிங்கத்தை ஒருகால் தெரிசனம் பண்ணின மாத்திரத்தால் மோட்சசாம்பிராச்சியஞ் சித்திக்கும். ()

பின்பு அந்த மதுப்பிரியருஞ் சீவன் முத்தராய் அந்த க்ஷேத்திரத்தில்தானே வெகு ரிஷிகளுடனே பிதிர்க்களுக்குத் தர்ப்பணம் பண்ணிச் சர்வாங்கத்தினும் அன்புடனே நிர்மலமாய விபூதிகொண்டு உத்தூளனம்பண்ணித் திரிபுண்டரந் தரித்துக்கொண்டு கண்டம் சிரம் கரம் முதலான ஸ்தானங்களில் உருத்திராக்கந்தரித்துக்கொண்டு மகாலிங்க ரூபியான திரிபுவனேசுவரரைச் சோடஶ உபசாரத்தாற் பூசித்துப் பஞ்சாக்கரஞ் செபித்துக்கொண்டு இவ்விதமாய்ச் சொரூப நிட்டாபரராக வெகுகாலங் கழித்தபின்னர் யாவராலும் அடைகிறதற்கு அருமையான விதேகமுத்தியை அடைந்தார். (உரு)

பரமசிவப் பிரசாத ஏதுவான இந்த அத்தியாயத்தைப் படிக்கின்றவர், படிப்பிக்கின்றவர், கேட்கின்றவர், கேட்பிக்கின்றவர், எழுதுகின்றவர் எல்லோரும் இகத்திற் சகல பாக்கியங் கீர்த்தி முதலானவைகளையு மடைந்து, அந்தத்தில் மோட்சத்தையும் அடைவார்கள். (உகூ)

இப்படி ஸ்காந்த புராணத்தில் க்ஷேத்திரகண்டத்திலுள்ள
சமிவனமான்மியத்தின்
ஏழாவது அத்தியாயம் முற்றிற்று
ஆக அத்தியாயம் எ-க்குச் சுலோகம் உருஉ.

---

## எட்டாவது சுவேத மகாராசாவின் சரித்திர முரைக்கும் அத்தியாயம்.

அகஸ்தியர் சொல்லுகின்றார்:—ஏ சைமினியே! பூர்வ காலத்தில் சுவேத மகா இராசாவின் புத்திரனாகிய சுவேத னென்கின்ற மகாராசனானவன் சிலகாலம் இராச்சியத்தை மனுநீதிப் பிரகாரம் பரிபாலனம் பண்ணிக்கொண்டிருந்தான். பின்பு மகாபுத்திமானான அந்தச் சுவேத மகா ராசனானவன் சோதிடத்தினாற் தன்னுடைய ஆயுசு சொற்பமாய் எஞ்சி யிருக்கிறதென்று விசாரித்தறிந்து கொண்டு, தன் இராச்சியத்தைத் தன்புத்திரனிடத்தில் ஒப்புவித்து விட்டு மேன்மை யுடைய தண்டகாரணிய வனத்தை அடைந்தான். (உ)

பின்பு அவ்விடத்தில் மகத்தான தபசைச்செய்ததனால் பிரமலோகத்தை அடைந்தான். அந்தப் பிரமலோகத்தில் அவ்வரசன் பசியினால் மெத்தவும் வாதிக்கப்பட்டவனாய்ப் பிரமதேவரை நோக்கிச் சொல்லுகின்றான். "ஏ தேவதேவராயிருக்கின்ற பிரமதேவரே! இதென்ன ஆச்சரியம்! ஏ

சுவாமீ! மகத்தான தபோபலத்தால் துர்லபமான பிரம லோகத்தையடைந்தேன்; அப்படி அடைந்தும் எனக்கு எப்போதும் பசியினால் வருத்தமுண்டாகிக்கொண்டிருக் கிறது; ஆதலால், நான் என்ன செய்வேன். (ரு)

என்று சொன்ன அவ்வரசன் வசனத்தைப் பிரம தேவர் கேட்டு, "ஏ இராசனே! பூமியில் விதையாதது முளை யாதன்றோ? நீர் பூர்வம் பூலோகத்தில் இராசரீகம் பண் ணும்போது பிராமணர்களுக்கு அன்னதானம் அற்பமாகி னும் பண்ணவில்லை; தபோவனத்தினும் உன்னுடைய தேக மாத்திரத்தை இரட்சித்துக்கொண்டிருந்தாயே யன்றிப் பிராமணர்களுக்கு ஒன்றுங்கொடுக்கவில்லை; மகத்தான தப சால் என் லோகத்தை யடைந்தும் கர்மபூமியில் அன்ன தானஞ் செய்யாததினாலே இப்போது இங்குப் பசியினால் வாதிக்கப்படுகின்றாய். (அ)

ஆதலால் பூர்வம் நீ எந்தவனத்தில் உன்னுடைய தேகத்தை விட்டாயோ, அந்த வனத்தில் அந்தப் பிரேத தேகம் இருக்கின்றது. உன்னுடைய பசி தீரும்பொருட்டு அந்தப் பிரேத தேகத்தைப் பட்சிப்பாய்'' என்று பிரம தேமர் சொல்லியதைக் கேட்டுப் பின்பு அவ்வரசன் வெகு துக்கத்துடனே விமானத்திலேறிக்கொண்டு கிரீடாதிகளால் அலங்கரிக்கப்பட்டவனாய் அப்ஸர மாதர்களினால் வீசப் பட்ட வெண்சாமரையை யுடையவனாய்ப் பூமியில் அந்தப் பிரேத தேகமிருகின்ற வனத்தி லிறங்கி, அதைப் பட்சித்து மறுபடியும் விமானத்தி லேறிக்கொண்டு பிரம லோகம் போய்ச் சேர்ந்தான். (கஉ)

இப்படித் தினந்தோறும் அசுத்தமான அந்தப்பிரேத தேகத்தைப் பட்சித்துக்கொண்டு, வந்தபோதினும் அந்தத் தேகம் நாச மடையாமல் மீண்டும்மீண்டும் விர்த்தியடைந்து கொண்டிருந்தது.

இப்படி இருக்கும்போது ஒரு காலத்தில் அந்தத் தண்டகாரணியத்தி லிருக்கின்ற தண்டகாசுரன் பிருகுமகாரிஷியின் புத்திரியான பூப்படையாக் கன்னிகையை அடமாய் அங்கீகரித்த தோஷத்தால் அந்த வனமானது மிருக பட்சி முதலியன சஞ்சரியாத பாலை வனமாய்விட்டது. பின்பு அந்த வனத்தில் அகஸ்தியனென்கின்ற யான்போய் அதை முன்போலப் பட்சி மிருகாதிகளோடே கூடியதாகச்செய்து அவ்விடத்தில் வசிக்கும்போது ஒருநாள் அவ்விடத்தில் அந்தத் தேவரூபமான் சுவேதமகாராசாவானவன் சகல அலங்காரசம்பன்னனாய்த் தன்பிரேத தேகத்தைவிமானத்திலிருந்து இறங்கிப் பட்சித்தான் (கசு)

அதை நான் கண்டு இது என்னவென்று இராசனைக் கேட்க, அந்தத் தேவரூபமான இராசன் துக்கத்துடனே என்னைப்பார்த்து, "ஏ மகாரிஷியே! நான் பூர்வஞ்செய்த தபோபலத்தால் தேவத்துவத்தையுஞ் சத்திய லோகத்தையும் அடைந்தேன். அப்படி அடைந்தபோதிலும் பூர்வம் பிராமணர்களுக்கு நான் அன்னதானம் பண்ணாத தோஷத்தால் மகத்தான பசியினாற் றுன்பப்பட்டு பிரமாவின் வாக்கியத்தினாற் றினந்தோறும் விர்த்தியடையாநின்ற இந்தப் பிரேத தேகத்தைப் பட்சித்துக்கொண்டு வருகின்றேன். அப்படிப் பட்சிக்கிற என்னிடத்தில் தேவரீர் தயவு பண்ண வேண்டும்'' என்றடிக்கடி பிரார்த்தித்துத் தன் கண்டத்திலிருந்த ஒரு முத்துமாலையை எடுத்துக்கொடுத்தான். (உ௦)

நான் அடையவேண்டியதை யடைந்து கிருதகிருத்தியனா யிருந்தபோதினுந் தயையினாலே அதை வாங்கிக் கொண்டேன்; வாங்கினவுடனே அவனுடைய பிரேத தேகம் நசித்துப்போய்விட்டது. அவனும் அமுதபானம் பண்ணினவன்போலப் பசியகலப்பெற்று மிகுந்த திருப்

தியை யடைந்து, வெகு சந்தோஷத்துடனே என்னை வணங்கித் துதித்து, அஞ்சலி செய்துகொண்டு, "கைம்மாறன்றிக் கருணை செய்யாநின்ற அகஸ்திய மகாரிஷியே! தங்களுக்கு அனந்த நமஸ்காரஞ் செய்கின்றேன்'' என்று இப்படி வெகுவிதமாய் என்னைப் பிரார்த்தித்துக்கொண்டு மறுபடியுஞ் சொல்லுகிறான்.

"ஆ! ஆ! அன்னதானமே எவைக்கு மேலான தானம்; தானமே தபசுக்கெல்லாம் உத்தமதபசு; தானமே மகத்தான எக்கியம்; தானமே மகத்தான கீர்த்தி; ஏனெனில் தானத்தினாலன்றோ மகா பாவத்தால் வெகு நாளாய்ப் புசித்து வந்த இந்தப் பிரேத பக்ஷண நீங்கிற்று?'' என்று இவ்விதமாய்த் தானத்தைத் தானே சிலாகித்து அச்சுவேத மகாராசாவானவன் விமானத்திலேறிக்கொண்டு சத்திய லோகத்தை அடைந்தான். (௨ரு)

இப்படி ஸ்காந்தபுராணத்தில் க்ஷேத்திர கண்டத்திலுள்ள சமிவன மான்மியத்தின் எட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

ஆக அத்தியாயம் அ-க்குச் சுலோகம் ௨௫௭.

## ஒன்பதாவது அன்னதானமகிமை யுரைக்கும் அத்தியாயம்.

அகஸ்தியர் சொல்லுகின்றார்:—ஏ சைமினியே! பின்பு அந்த தண்டகாரணியத்தை விட்டு நான் என தாச்சிரமத்தை அடைந்தேன்; பின்பு அந்தச் சுவேத மகாராசாவினுடைய புத்திரனாகிய சுவேதனென்கின்ற மகாராசாவானவன் என்னைத் தரிசிக்கிறதற்காக எனது ஆச்சிரமம் வந்து சேர்ந்தான். அப்போதவன் பிதாவினுடைய விர்த்தாந்தம்

யாவையும் நான் சொல்லக் கேட்டதனுற் றுக்கத்தையும் சந்தோஷத்தையும் அடைந்தான். பின்பு அந்தச் சுவேத னனவன் அன்னதானம் பண்ணவேண்டுமென்று மிகுந்த இச்சையுடனே "ஏ பகவானன அகஸ்திய மகாரிஷியே! அன்னதானஞ் செய்வதற்கு உத்தமமான க்ஷேத்திரம் எது வென்று என்னைக் கேட்டான். (ரு)

பின்பு ஒரு முகூர்த்த பரியந்தம் நானுவிதமாக ஆலோசித்துப் பார்த்து, க்ஷேத்திரங்களுக்கெல்லாம் உத்தம க்ஷேத்திரமாயும், மதுபுஷ்கரணி தீர்த்தத்தோடே கூடிய தாயு மிருக்கின்ற சமிவன க்ஷேத்திரமே உத்தமம். சுவர்ண வருஷேஸ்வர க்ஷேத்திரத்துக்கு உத்தர திக்கில் அரை யோசனை தூரத்தி லிருக்கின்றதாயுஞ் சத்தியகிரி க்ஷேத்தி ரத்துக்குத் தக்ஷிண திக்கில் ஒருயோசனை தூரத்தி லிருக் கின்றதாயுஞ் திரிபுவனேஶ்வர ரென்கிற நாமமுடைய மகா லிங்க ரூபியான பரமசிவன் எப்போதும் பிரியமுடன் வசிக் கிறதற்கு இடமாயும் இருக்கின்ற அந்தச் சமிவன க்ஷேத்தி ரத்திற்கு நீ போய் அன்னதானஞ் செய்யக்கடவாய். (சு)

அந்த க்ஷேத்திரத்தில் யாதொருத்தன் ஒரு கவளமாத் திரமாயினும் அன்னதானஞ் செய்கிருனே, அவன் அக்கி னிஷ்டோமாதியாகஞ்செய்தோருக்கு எந்தப் பலனே, அந் தப் பலத்தை அடைவன்; இதில் சமுசயமுமில்லை. இந்த க்ஷேத்திரத்தில் அன்னதானத்தைக் கொடுப்போன் புசிப் போன் இருவருஞ் சூரிய மண்டலத்தைப் பேதித்துக் கொண்டுபோய்ச் சத்திய லோகத்தை அடைவர்; சமுசய மில்லை என்று கூறினம். (அ)

இவ்விதஞ் சொன்ன எமது வசனத்தை அவ்வரசன் கேட்டு,உடனே அந்தக்ஷேத்திரத்தையடைந்து, நாலுதிக்கி லுஞ் சுற்றிப்பார்த்துச் சந்தோஷத்துடனே அவ்விடத்தி

ளுள்ள வனங்களையெல்லாஞ் சனங்களைக்கொண்டு சேதித்துச் சமபூமியாகச்செய்து, அந்தந்த விடத்திற் சாலி என்கின்ற செந்நெல் விளையும்படியான வாடி என்கின்ற வயல்களையுண்டுபண்ணி, உழவர்களை வரவழைத்து அவர்களைக்கொண்டு அந்தந்த வயலிற் சாலிப் பயிரிடும்படி செய்தான். (௧௦)

அன்றுமுதற் சாலியோடே கூடிய வாடிகளால் இந்த க்ஷேத்திரம் விளங்குகின்றபடியால் இந்த க்ஷேத்திரத்திற்குச் சாலிவாடி என்று நாமம் பிரசித்தமாய் விளங்கும். அன்றியும் நந்தவனங்களுஞ் சோலைகளும் தடாகங்களும் ஏரிகளும் நாலுபக்கத்திலும் உண்டுபண்ணிச் செம்மையாக உழுது, புழுதிபண்ணப்பட்ட நிலத்தில் கரும்பு முதலான பயிர்களையும் உண்டுபண்ணினன். (௧௧)

பின்னும் பயிரிடும்படியான வேளாளருடைய வீதியும், வியாபாரஞ் செய்யும்படியான வணிகர்களுடைய வீதியும், க்ஷத்திரியர்களிருக்கின்ற வீதியும், அறுவகைத் தொழில்களைச் செய்யாநின்ற அந்தணர்களுடைய வீதியுங் கிரமமாகச்செய்தான். (௧௨)

பின்பு சிற்பர்களைக்கொண்டு செம்மையாக அன்னசத்திரஞ் செய்வித்து, அதில் மறையோர் முதலானவர்களுக்கு நிரந்தரம் அன்னதானஞ் செய்தான். துவாதசி தினந்தோறும் பிதிர்திருப்தியின் பொருட்டும் விசேடமாய்ப் பாயசத்தாலும் பால் தயிர் நெய் பழம் சர்க்கரை முதலியவற்றாலும், அறுவகைச் சுவையுடனேகூடிய அன்னங்களாலும், பிராமணர்களுக்குப் போசனஞ் செய்வித்துச் சந்தோஷத்தைச் செய்வித்தான். (௧௩)

ஆயிரங் கிரகணபுண்ணியகாலமும், பதினாயிரம் விதிபாதபுண்ணியகாலமும், இலட்சம் அமாவாசை புண்ணிய

காலமும், துவாதசியினுடைய பதினாறி லொருபங்குக்குச் சமானமாக மாட்டா. ஆதலாற் றுவாதசி தினந்தோறும் விசேடமாய் அன்னதானஞ் செய்வித்தான். (௧௬)

இப்படி நெய், சர்க்கரை, தேன்கலந்த நானாவிதமான பட்சணங்களோடு ருசியாயிருக்கின்ற சாலி யன்னத்தைப் பிராமணர்களுக்கு நியமமாகப் போசனஞ் செய்வித்து அத னால் இகத்திலும் பரத்திலும் எல்லோராலுந் துதிக்கப்பட்ட வனாயிருந்து இகத்தில் நானாவித போகங்களைப் புசித்து அந்தத்திற் பரமசிவபதத்தை அடைந்தான். (௧௭)

இப்படி ஸ்காந்தபுராணத்தில் க்ஷேத்திரகண்டத்திலுள்ள சமிவனமான்மியத்தின் ஒன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

ஆக அ'த்தியாயம் ௯-க்குச் சுலோகம் ௨௭௪.

---

## பத்தாவது சுதர்மைக்குத் தேவி பிரத்தியட்சமான அத்தியாயம்.

அகஸ்தியர்சொல்லுகின்றார்:—ஏ சைமினியே! சாலி வாடீஸ்வரியினுடைய கதையைச் சொல்லு கின்றோம், கேட்பாயாக. இதைக் கேட்டமாத்திரத்தால் மகத்தான ஐசுவரியமுண்டாகும்; பூர்வஞ்சாலிவாடி க்ஷேத்திரத்தில் வேளாண்மை செய்யா நின்றவனாய்ச் சிவபத்திபரனாய் அன் புடனே நிர்மல விபூதிகொண்டு சர்வாங்கமும் உத்தூளனம் பண்ணி நெற்றி முதலான அவயவங்களில் விதிப்படி திரி புண்டரந் தரித்துக்கொண்டவனாய்க் கண்டம் கரம் சிர முத லானவைகளில் உருத்திராக்கமாலை தரித்துக்கொண்டவ னாய்ப் பஞ்சாட்சர செபபரனாய்ச் சிவகுப்த னென்கின்ற நாமமுடைத்தான ஒருவணிகன் இருந்தான். (௨)

அவன் பெரிதான மார்க்கங்களில் தடாகங்களையுஞ் சாலைகளையும் உண்டுபண்ணினன். பின்னும் யாசகர்களுக்குத் தன் கைவசமிருக்கின்ற திரவியத்தைச் சிவார்ப்பண புத்தியோடு கொடுத்தான். அந்த வணிகனுக்குச் சுதர்மை என்கிற நாமத்தையுடையவளாய் மகாபதிவிரதையாய் ஒரு பாரி இருந்தாள். அவள் பர்த்தாவினுடைய மனம்போலே நடந்தும், எப்போதும் விபூதி உருத்திராக்கந் தரித்தும், பஞ்சாட்சர செபத்தை எப்போதுஞ் செய்தும், ஏதாகிலும் நல்ல வஸ்துக்கள் கிடைத்தால் அவையெல்லாம் அன்புடனே அம்பிகைக்கு நிவேதனஞ் செய்தும், திரிபுவனேஸ்வரியான அம்மையைத்தானே தினந்தோறும் நியமமாய் உபாசித்து வருவாள்.

அந்தச் சுதர்மை என்கிறவளுக்கு வெகு சுந்தரமான சரீரத்தோடு இரத்தினவல்லி என்கின்ற நாமமுடைத்தான ஒருகன்னிகை இருந்தாள். அந்தக் கன்னிகையானவள் தன்னுடைய சகிகளோடேகூடத் தினந்தோறுந் தங்களுடைய சாலிப்பயிர்நிறைந்த வயல்களைக்கருப்பங்கொல்லை நிழலிலிருந்து சந்தோஷமாகக் காத்துக்கொண்டிருந்தாள். அவள் தினந்தோறுந் தன்தாயாரால்கொண்டு வரப்பட்ட உருசியான அன்னத்தைக் காலையில்புசித்து வயல்களைக் காத்துக்கொண்டிருக்கும்போது ஒருநாள் அந்த இரத்தினவல்லியானவள் புட்பம் பறித்து விளையாடவேண்டுமென்கின்ற இச்சையால் மதுபுஷ்கரணி தீரத்திலிருக்கின்ற புட்பவனத்திற்குச் சகிகளுடனே போயினள். அந்தச்சமயத்தில் அவளுடைய தாயாரான சுதர்மையானவள் வயலைக் காக்கின்ற தன் கன்னிகை புசிக்கும் பொருட்டுப் புழுங்கலரிசியாற் சமைத்த தயிர்கலந்த அன்னத்தை நல்ல நல்ல ஊறுகாய்களுடன் அவ்விடத்திற்குக் கொண்டுவந்தனள். (சு)

அந்தச் சமயத்தில் திரிபுவனேஸ்வரருக்கு நாயகியான திரிபுவனேஸ்வரி என்கின்ற அம்பிகை கோவிலிருக்கின்ற மூலவிக்கிரகத்தினின்றும் இரத்தினவல்லி வடிவம்போலத் திவ்விய அலங்காரத்தோடே கூடிய ஒருவடிவ மெடுத்துக் கொண்டு அவள் இருந்த விடத்திற்கு வந்து, அவளைப் போலச் சாலிப்பயிர் காத்துக்கொண்டிருந்தாள். பின்பு சாலிப் பயிர் நுனிகளைக் கொய்து அதைச் செவியில் அலங்காரமாய் வைத்துக் கொண்டிருக்கின்றவளாய்க் குங்குமப் பூச்சால் அலங்கரிக்கப்பட்ட கபோலத்தையுடையவளாய்க் கஸ்தூரிப் பொட்டால் அலங்கரிக்கப்பட்ட நெற்றியையுடையவளாய் மான்கன்றின் நேத்திரம்போலச் சஞ்சலமான நேத்திரங்களை யுடைத்தானவளாய் இரத்தின வல்லி வடிவெடுத்துக் கொண்டிருக்கின்ற தேவியைச் சுதர்மையானவள் கண்டு மிகுந்த சந்தோஷத்துடனே மயிர்ப் புளகமுண்டாய் அவளுடைய முகார விந்த மதுவைத் தன்னுடைய நேத்திரமாகிற பிரமரங்களாற் பானஞ்செய்து, திருப்தி அடையாமல் நிரம்பவும் அவளிடத்திற் பிரீதியையுடையவளாய்ச் சொல்லுகின்றாள். (கூ)

"ஏ பெண்ணே! இவ்வளவுபோது பசியாயிருந்தனையே! இப்போது நான் கொண்டுவந்த நல்ல ஊறுகாய்களுடன் கூடிய இந்தத்தயிரன்னத்தை இந்தப் பெரிதான தாமரை இலையில் வைத்துக்கொண்டு புசிப்பாய்" என்று சொன்னாள். (சர)

பின்பு தேவியானவள் சுதர்மையின் கையால் அத்தாமரையிலையில் பரிமாறப்பட்ட தயிர் அன்னத்தைச் செய்க்கரையோரத்தில் மகாபிரீதியுடனே போசனஞ்செய்தாள்.

பின்பு சுதர்மையானவள் பச்சைக்கற்பூரங் கிராம்பு சாதிக்காய் ஏலம் முதலான வாசனைத் திரவியங்களுடனே

கூடிய கொட்டைப் பாக்குச் சீவலைக் கொடுத்து, நல்ல வெற்றிலைகளையும் நல்ல சுண்ணந்தடவி மடித்து ஆதர வுடனே தேவிக்குக்கொடுத்தாள். (கரு)

கொடுத்த பின்னர் "ஏ பெண்ணே! நீ வெய்யிலிற் போய் எவ்வளவும் வருத்தப்படாதே; இந்த மாமரத்தின் நிழலில் உன்சகிகளுடனே கூடவிருந்து விளையாடிக்கொண்டு சந்தோஷமாகச் சாலிப்பயிரைக் காத்துக்கொண்டிரு" என்று சொன்னாள். (கசு)

அந்த வசனத்தை இரத்தினவல்லி ரூபமான தேவி கேட்டுப் புன் சிரிப்பினால் வெகு சுந்தரமான முகாரவிந்தத் துடனே "அம்மா! நீ சொன்னபிரகாரமே நான் செய் கிறேனென்று சொல்லவும், சுதர்மை யானவள் தன் கிரு கத்துக்குப் போய் விட்டனள். பின்பு பக்தசனப் பிரீதியை யுடையவளான தேவியும் இவ்விதம் லீலைசெய்தபிறகு தன் னுடைய மூலவிக்கிரகத்தில் அந்தர்த்தானத்தை யடைந் தாள். (கஎ)

அச்சமயத்தில் இரத்தின வல்லியானவள் புட்பம் பறித்த சிரமத்தால் முகம் வாடி வேர்வை யரும்ப வருத் தத்துடன் சீக்கிரமாய் மாதா விடத்துக்கு வந்து, "அம்மா! நான் இவ்வளவு போது தோழிகளோடேகூடப் புட்பம் பறித்துக்கொண்டிருந்தேன், இப்போது எனக்கு அதிக பசியா யிருக்கிறது, சீக்கிரமாய் அன்னமிடுவாய்" என்று சொல்லக்கேட்ட சுதர்மை இதென்ன வென்று மிகுந்த ஆச்சரிய சித்தத்தவளாய்ப் "பெண்ணே! க்ஷணத்துக்கு முன்னே நான் கொண்டுவந்த தயிரன்னத்தை நீ புசித்தா யன்றோ? திரும்பவும் ஏன் அன்னங் கேட்கிறாய்" என்று சொல்ல, மாதாவின் வசனத்தை இரத்தினவல்லி கேட்டு, "அம்மா! ஏன் வீணாகப்பொய் சொல்லுகிறாய், நான்

அன்னம் புசிக்கவில்லையே ; இதோ என் வயிற்றைப்பார்'' என்று சொன்னாள். (உக)

இப்படி நடந்த இந்த விர்த்தாந்தத்தை இரத்தினவல்லியினுடைய பிதாவும், அவளுடைய சகிகளும் பந்துக்களுங் கேட்டு, எல்லோரு மொருமித்துக் கூடி ஆச்சரியத்தை யடைந்து சொல்லுகிறார்கள். "இந்தச் சுதர்மையானவள் நல்ல தருமத்துடனே அம்பிகையிடத்தில் நிரந்தரம் நியமமாகப் பக்தி செய்தபடியால், அத்திரிபுவ னேஸ்வரியான அம்பிகையே பக்தி விசுவாசத்தால் இரத்தினவல்லிரூபமாய் இவளுக்குப் பிரத்தியக்ஷமாகித் தயிரன்னத்தையும் புசித்தாள். ஆதலால், இந்தத் தர்மசாலியான சுதர்மையின் பாக்கியவிசேடத்தை என்னவென்று வியந்து சொல்லுவோம்! ஆ ஆ! சச்சிதானந்த பரிபூரணியாய்ப் பரமசிவா பின்னையாய்ச் சர்வசத்திரூபியாய்ப் பக்த சனப் பிரியளாய்ப் பக்தாபீஷ்ட பலத்தைக் கொடுப்பவளாய்ச் சகல செகன்னயகியான சாட்சாத் பராசத்திதானே இவளிடத்தில் விசுவாசத்தாற் பிரத்தியட்சமாய் அன்னத்தைப் புசித்தாளென்றால், இந்தச் சுதர்மையைப் பாரியாளாகப் பெற்ற சிவகுப்தனுடைய பாக்கியத்தை என்ன சொல்லுவோம்! என்னசொல்லுவோம்!!'' என்று புகழ்ந்துகொண்டு, எல்லோருமாய், அம்பிகை ஆலயத்துக்குப் போய்ச் சர்வ காமத்தையுங் கொடுத்தருளும் அம்பிகையின் சரணாரவிந்தத்தை நமஸ்கரித்தார்கள். (உஎ)

பின்பு அந்தச் சனங்கள் அம்பிகையுடைய முகத்தைப் பார்க்கும்போது சுதர்மை முன் அன்னங் கொடுக்கும் போது கண்டபிரகாரஞ் செவியில் அலங்கரித்த சாலிப் பயிர் நுனிகளையுங் கபோலத்தில் அலங்கரித்த குங்குமப் பூச்சையும் நெற்றியில் அலங்கரித்த கஸ்தூரிப் பொட்டை

யும் அந்தந்தபடியே கண்டார்கள். அன்றியும் அம்பிகையு டைய முகத்தில்நின்றுந் தயிரன்னவாசனை பொருந்திய காற்றும் அவர்கள் எதிரே வீசிற்று. இந்தச் சின்னங்களை யெல்லாம் எல்லோருங்கண்டு மிகுந்தசந்தோஷத்துடனே அனேகபிரதக்ஷிண நமஸ்கார ஸ்தோத்திரங்கள்செய்து, அப்பிராட்டியின் பேரருட் பிரசாத பாத்திரர்களாகித் தங்கள் கிருகங்களை அடைந்தார்கள். (உஅ)

பின்பு சுதர்மையானவள் மிகுந்த அன்புடனே திரிபு வனேஸ்வரியினுடைய சந்நிதானத்தில் அஞ்சலியஸ்தளாய் நின்று துதிக்கின்றாள். "சத்திய ஞானனந்தரூபியே போற்றி! சர்வாதிஷ்டான ரூபியேபோற்றி! சர்வசாட்சி யாகின்றவளே போற்றி! சர்வாத்ம சொரூபியேபோற்றி! சர்வவேதாந்தப் பொருளேபோற்றி! சதாசிவா பின்னை யேபோற்றி! சமரசவடிவேபோற்றி! சர்வபூரணியே போற்றி! சர்வசத்தியே போற்றி! சர்வாபீஷ்டத்தைக் கொடுப்பவளே போற்றி! சர்வேஸ்வரியே போற்றி! சர்வகாரணியே போற்றி! நிஷ்களவடிவே போற்றி! நிஷ் கிரிய சொரூபியே போற்றி! நிர்விகாரியே போற்றி! நிரஞ் சனையே போற்றி! நிராதாரியே போற்றி! நிர்க்குணியே போற்றி! நித்திய சுத்த புத்தமுத்த அகண்ட அத்துவித சொரூபியே போற்றி! சகல இலட்சணமும் பொருந்திய திவ்விய மங்கள மூர்த்தியே போற்றி!" என்று இப்படி வெகு விதமாய்த் துதித்து, மிகுந்த சந்தோஷத்துடனே தன் கிருகத்தை யடைந்தாள். திரிபுவனேஸ்வரியான தேவியானவள் வணிக கன்னிகை ரூபமாய்ச் சாலிவாடி யைக் காத்தபடியால் அன்றுமுதல் அந்த அம்பிகைக்கு ரிஷீஸ்வரர்கள் சாலிவாடீஸ்வரி என்று நாமத்தைச் சூட்டி னார்கள். (உகூ)

பின்னும் அந்தச் சுதர்மை யானவள் பர்த்தாவி னுடனே அந்த அம்பிகையையும் சுவாமியையும் வெகு காலம் வரையில் தர்ம மார்க்கத்துடனே தினந்தோறும் பூசித்து, இகத்திற் சகல போகமும் புசித்து, அந்தத்தில் தேவதைகளாற் றுதிக்கப் பட்டவளாய் மகா கைலாச பதத்தை அடைந்தாள். (௩௰)

அவளுடைய பர்த்தாவான சிவகுப்தனும் புத்திர பௌத்திராதிகளுடனே வெகு பாக்கியத்தை அடைந்து, சிவபத்தி செய்துகொண்டிருந்து, தன்க்குள்ள பாக்கியத்தை யெல்லாஞ் சிவார்ப்பணஞ் செய்து, அந்தத்திற் பரமசிவபதத்தை அடைந்தான். (௩௧)

யாவனொருவன் சர்வா பீஷ்டத்தையுங் கொடுத்தரு ளும் ஸ்ரீ சாலிவாடீஸ்வரிக்குச் சுக்கிரவாரத்தில் தயிரன்ன மாவது பாயசமாவது நியமமாக நிவேதனஞ் செய்விக்கின் றனே, அவன் சகலாபீஷ்டத்தையும்அடைந்து, அந்தத்தில் மோட்சத்தையும் அடைவன். (௩௨)

இப்படி ஸ்காந்தபுராணத்தில் க்ஷேத்திரகண்டத்திலுள்ள சமிவன மான்மியத்தின் பத்தாவது அத்தியாயம் முற்றிற்று.

ஆக அத்தியாயம் ௧௦-க்குச் சுலோகம் ௩௦௭.

---

## பதினோராவது தீர்த்த மகிமையுரைக்கும் அத்தியாயம்.

அகஸ்தியமகாரிஷி சொல்லுகிறார்:—ஏ சைமினியே இப்படி மதுநதி தீரத்தில் மதுபுட்கரணி தீர்த்தத்தோடே கூடியிருக்கின்ற சமிவன க்ஷேத்திரத்தில் ஸ்ரீ பகவானுன திரிபுவனேஸ்வரர் திரிபுவனேஸ்வரியுடனே மகாலிங்க ரூபி

யாக மதுப்பிரியராதி ரிஷிகளினுலும் பிரமனுதி தேவர்களி ஞலும் பூசிக்கப்பட்டவராய் எப்போதும்விளங்குகிறுர். (க)

இந்தச் சமிவன க்ஷேத்திரத்தி லிருக்கின்ற மதுபுட் கரணிதீர்த்த மகாத்மியத்தைக் கேட்பவருக்குச் சகல பாவமு நீங்கி, ஆயுசுங் கீர்த்தி முதலியவும் விர்த்தி யடை யும். பூர்வம் மதுரையில் சத்துருசெய முள்ளவனுய்ச் சூர தன்மா வென்று நாமமுடைய ஒரு பாண்டியராசன் விபூதி உருத்திராக்கதாரியாய்ச் சிவபக்தனுய்ச் சிவ பக்தரிடத் திற் பிரீதியை யுடையவனுயிருந்தான். அந்தச் சூரதன்மா வென்கிற பாண்டியனுக்குச் சற்குண நிறைந்தவளாய்ச் சாதுக்களிடத்தில் விசுவாசமுள்ளவளாய்ப் பர்த்தாவிற்கு எப்போதும் பணிவிடைசெய்பவளாய் விபூதி உருத்திராக் கந் தரித்தவளாய்த் தினந்தோறும் சிவபூசை செய்பவ ளாய்ப் பஞ்சாட்சரத்தைச் செபிப்பவளாய்ச் சுகுணை என்னு நாமமுள்ள சுந்தரமான ஒரு பாரி இருந்தனள். (௨)

இவ்வணமிருக்க ஒருகாலத்தில் இராசசமுகத்தில் சம ணரான பாஷண்டர்கள் சிலர் வந்து, இந்திரசால முதலான சில வித்தைகளைக் காண்பித்து, வேத சாஸ்திர சம்மதமான சிவமதத்தினின்றும் இராசனைத்திருப்பி வேதசாஸ்திரவி ரோதமான தங்கள் சமணமதத்திற் பிரீதிவரும்படி செய் வித்தார்கள். (௩)

நான்குவருணச்சிரமத்தினுஞ் சேராதவர்களாய் வேத சாஸ்திரார்த்தத்தை நிந்திக்கின்றவர்களா யிருக்கின்றவர் களே சமணரென்றும் பாஷண்டரென்றும்சொல்லப்படுவர். அப்படிப்பட்ட சமண பாஷண்ட மதத்தைப் பூர்வஞ்செய்த பாவகர்மவசத்தால் இராசன் அடைந்தான். சுகுணை என் கிற அவனுடைய பாரியானவள் இராசன் சமண மதத்திற் பிரவேசித்ததைக் கண்டு மிகவும் கிலேசங்கொண்டு இரக

சியமான விடத்தி லிருந்து சொல்லுகின்ருள். "ஏ! பிராண நாதனே! நமக்கெல்லாம் வேதசாஸ்திரமே பிரமாணம், பரமசிவனே கதி, சிவபூசையே சகலபுருடார்த்த சாதனம், பூச்சக்கரக்குடை வெண்சாமரங்கள் உத்தமமானபரிகள் மதங்கொண்ட கசங்கள் பின்னும் நிகரில்லாத ஐசுவரியங்கள் யாவும் சிவ பூசையின் பலம்'' என்று பெரியோர்கள் சொல்லுவார்கள். விபூதி உருத்திராக்கதாரணத்துடனே செய்யப்பட்ட சிவபூசையின்மகிமையினுலன்ருே நமக்கெல்லாம் பல நன்மைகள் கிடைத்திருக்கின்றன?

விபூதி உருத்திராக்க தாரணத்துடனே சிவபூசை செய்யாமல் நெடுங்காலம் உசுவாச நிசுவாசத்துடனே கூடிச் சீவித்திருப்பது நீண்டகாலமிருக்கின்ற மரம்போலவுங் காற்றினை உட்கொண்டிருக்கின்ற துருத்திபோலவுமே யல்லாமல் நெடுங்காலஞ் சீவித்திருப்பதால் யாதொரு பிரயோசனமு மில்லை. விபூதி உருத்திராக்கந் தரியாமலுஞ் சிவபூசை செய்யாமலும் ஆகார நித்திரை பயம் மைதுனம் இவைகளை அடைந்திருப்பது மாட்டுக்குச் சமானமேயன்றி இப்போதொரு விசேடமுமில்லை. ஆனுல் மாட்டுக்கு நான்கு பாதம், இவனுக்கு இரண்டுபாதம் என்பதே விசேடம். இராசத்துவந் தேவத்துவமுதலான சகலபதங்களும் விபூதி உருத்திராக்கதாரணத்துடனே செய்யப்பட்ட சிவபூசையின்மகிமையாற் கிடைக்கத்தக்கவைகளாக இருக்க, அப்படிப்பட்ட சிவபூசை முதலான சிவபக்தியைவிட்டுத் தாங்கள் ஏன் சமணமதத்தை அடைந்தீர்? இனி அம்மதத்தை விட்டுவிடும்'' என்று வெகுவாய்ப் போதித்தனள். இப்படித் தன் பாரியினுலே போதிக்கப்பட்டும், அவ்வரசன் பாவ கர்ம வசத்தாற் பூர்வம்போல நன்மைக் கிடமான சிவபக்தியை யடையாமல் சமணருடைய சம்பந்ததோஷத்தால் அற்ப ஆயுசாய் மரித்துப்போய்விட்டான். அந்தச்

சுகுணையானவள் பர்த்தாவினிடத்திலிருந்த விசுவாசத்தால் அவ்வரசனோடு கூடவே மரித்துப் போய்விட்டனள். (கச)

பின்னர் அந்தச் சுகுணையானவள் பூர்வபுண்ணிய வசத்தால் அகளங்க புரத்தில் இராச கன்னிகையாகப் பிறந்தாள். அந்தச் சூரதன்மாவென்கிற பாண்டியனும் சாகலபுரத்தில் இராசாவின் குமாரனாகப் பூமியிற் பிறந்து பூர்வ பாவ வசத்தால் மகாவியாதியினாலே பீடிக்கப்பட்டவனா யிருந்தான். (கரு)

அந்த அகளங்கபுரத்தி லிருக்கின்ற இராசனானவன் தன்னுடைய சுந்தரமான கன்னிகைக்கு விவாகஞ் செய்வதற்குச் சுயம்வரமண்டபம் அலங்கரித்து நாலு திக்கிலுமிருக்கின்ற அனேக அலங்காரமுள்ள அனந்த இராச குமாரர்களை வரவழைத்துச் சுயம்வர விவாகம்பண்ண வேண்டித் தன்னுடைய கன்னிகையிடத்தில் மாலையைக் கொடுத்தனுப்வித்தான். பின்பு அந்தக்கன்னிகை சுயம்வரம் பண்ணுகிறதற்காகஇராசகுமாரர்கள் எல்லோரையும்பார்த்துக்கொண்டுவரும்போதுஇந்தக் கலியாணவினோதம் பார்க்கிறதற்காக ஒருபக்கத்திற் றனித்துவந்திருந்து ரோகங்கொண்ட தன்சரீரத்தை வஸ்திரத்தால் மறைத்துக்கொண்டிருக்கப்பட்ட சாகலபுரத்து இராசன் புத்திரனைக் கண்டு பூர்வஞானத்தாற் பூர்வ சென்மத்தில் இவன் நமது பர்த்தாவென்றறிந்து, ரோகத்தால் இளைத்திருக்கின்ற அவன் கண்டத்திற் சுயம்வரமாலையைப் போட்டனள். (உக)

பின்பு அவ்விடத்தில் வந்திருந்த இராசகுமாரரெல்லாம் அதிரூப யௌவனாகளான உத்தம இராச குமாரரையெல்லாம் விட்டு ஒரு மகா ரோகியின் கண்டத்தில் மாலையை இவள் போட்டாளென்று நாலுபக்கத்திலும் பரிகாசம் பண்ணினார்கள். அதை அகளங்க புரத்து இராசன்கேட்டுத் தலைகுனிந்து மிகவும் நாணத்தை அடைந்தான். (உ௨)

பின்பு அந்த இராச கன்னிகை யானவள் பதிவிரதா நியமந்தப்பாமல் அவனைத் தானே பர்த்தாவாக விவாகம் பண்ணிக்கொண்டு, மிகவும் நல்லவார்த்தைகளைச் சொல்லிப் பிதாவினுடைய உத்தரவு பெற்றுக்கொண்டு அந்த ரோகி யான பர்த்தாவினுடனே சாகலபுரம் போய்ச் சேர்ந்தாள்.()

அவ்விடத்தில் அந்த இராச கன்னிகை தன் பர்த்தா விற்குத் தினந்தோறும் பணிவிடைபண்ணிக் கொண்டு அவன்ரோகந் தீரும் பொருட்டுப் பர்த்தாவினுடனே அனேக ஸ்தலங்களுக்குப் போய் அந்தத் தீர்த்தங்களில் ஸ்நானம் பண்ணி அந்தத் தேவதைகளைப் பூசித்தும் பர்த் தாவிற்கு ரோகம் நீங்கவில்லை. (உசா)

இப்படி யாத்திரை முடித்து வருங்காலத்தில் ஒரு காலத்தில் ஏதோ ஒருபுண்ணியவசத்தாற் றன் பர்த்தாவி னுடனே சமிவனத்தில் மதுபுட்கரணிதீரத்தில் இருக்கின்ற திரிபுவனேஶ்வரருடைய சந்நிதானத்துக்குவந்து சேர்ந் தாள். அவ்விடத்திற்றன்னுடைய பர்த்தாவினது ரோக நீங்கவேண்டுமென்கின்ற இச்சையுடையவளாய் மிகுந்த அன்புடனே விபூதி உருத்திராக்கந் தரித்துக்கொண்டு கார்த்திகை மாசம் சோமவாரத்தில் நாலு சாமத்திலுந் திரிபுவனேஶ்வர மகாலிங்கத்தைச் சோடசோபசாரத் துடன் பூசை செய்து, இராத்திரிமுழுதும் பர்த்தாவுடன் கண்விழித்திருந்து உதயகாலத்திற் சகல மகாபாவங்களையுந் தீர்க்கும்படியான மதுபுட்கரணி தீர்த்தத்தில் பதியோடு ஸ்நாநம்பண்ணினாள். அந்த நிர்மலமான தீர்த்தத்தில் ஸ்நா னம் பண்ணின மாத்திரத்தால் அந்த இராச புத்திரனானவன் மகாரோகம் முற்றும் நீங்கப்பெற்றுச் சொர்ணத்திற்குச் சமானமான சரீரகாந்தியை அடைந்து, இராகுவினால் விடப் பட்ட சந்திரன்போல விளங்கினான். (௩க)

இப்படி ரோகம் விடுபட்டு விளங்காநின்ற தன் நாதனை அந்த இராச கன்னிகை பார்த்து, ஆனந்த பாஷ்பத்துடனே தழுவிக்கொண்டு மிகுந்த சந்தோஷத்தை அடைந்தாள். பின்பு அந்த க்ஷேத்திரத்தில் வசியாநின்ற மறையோர் முதலானவர்கள் இதைக்கண்டு மகா வியாதிபீடிதனுய்ச் சரீரம் இளைத்திருந்த இந்த இராசனனவன் இந்தத் தீர்த்தத்தில் ஒருதரம் ஸ்நானம் பண்ணினமாத்திரத்தால் மகாரோகம் நீங்கப்பெற்று இராசலட்சணத்தை அடைந்தான், ஆ! ஆ! ஆச்சரியமென்றுசொன்னார்கள்! அதை இராச கன்னிகையானவள் கேட்டு மிகுந்த சந்தோஷத்தை அடைந்து, திரிபுவனேஸ்வர மகாலிங்கத்தை வெகுவிதமாய்ப் பூசித்துச் சொர்ண புட்பங்களால் அருச்சித்து, அனந்த பிரதக்ஷிண நமஸ்கார ஸ்தோத்திரங்கள் பண்ணினள். (௩௪)

இந்த இராசகன்னிகை சில காலம்வரைக்குந் தன் பர்த்தாவினுடனே அந்த க்ஷேத்திரத்தில் வாசஞ்செய்து தினந்தோறும் அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி விபூதி உருத்திராக்கந் தரித்துக்கொண்டு பஞ்சாட்சர செபம் பண்ணிக்கொண்டு, சகலாபீஷ்டமுங் கொடுத்தருளும் திரிபுவனேஸ்வரரையுந், திரிபுவனேஸ்வரியையும் மிகுந்தபத்தியுடனேநியமமாகப் பூசித்துப் புதிதான மன்மதனைப்போல மகா சுந்தரமாயிருக்கின்ற தன் பர்த்தாவினுடனே சந்தோஷமா யிருந்தாள். அதற்குப் பின்பு இந்திரனேடே கூடிய இந்திராணிபோலத் தன் பர்த்தாவினுடனே சாகல புரத்தையடைந்து சிலகாலம் வேண்டிய போகங்களையெல்லாம் புசித்து அந்தத்திற் பரமசிவபதத்தைப் பதியோடு அடைந்தாள். (௩௫)

சகல மகா பாவங்களையும் போக்குந் தகுதியுடையதாயும் சகல மனேபீஷ்டத்தையுங் கொடுக்கும்படியான

தாயும் தேவலோகத்தி லிருக்கின்ற தேவர்களாலும் இச்சிக்கப்பட்டதாயும் மகா மங்களமாயு மிருக்கின்ற இந்த மதுபுட்கரணி தீர்த்தம் பூலோகத்திலிருக்கின்ற மானிடர்க்கு ஸ்நானம்பண்ணக் கிடைக்குமேயானல், மற்ற வெகுவிதமான புண்ணியங்களா லென்ன பிரயோஜனம்? இந்தத் தீர்த்த ஸ்நானமே யாவருக்கும் போகமோக்ஷங்களைக் கொடுக்கும். (ருஎ)

இந்த மதுபுட்கரணி தீர்த்தத்திற்கு மேற்புறத்தில் பிரம தீர்த்தம் என்றொரு தீர்த்தம் பிரசித்தமாயுண்டு. அந்தத் தீர்த்தத்தில் மகா பாவிகளானலும் வருணச்சிரம நியமந் தப்பின பதிதரானலும் வேதமார்க்க விரோதிகளான பாஷண்டிக ளானலும் மற்றும் எவரானலும் ஸ்நானம் பண்ணினல் அந்த க்ஷணத்திலேயே சகல பாவமு நீங்கி மோக்ஷத்தை அடைகுவர் சந்தேகமில்லை. (ருகூ)

இப்படி ஸ்காந்தபுராணத்தில் க்ஷேத்திர கண்டத்திலுள்ள
சமிவன மான்மியத்தின் பதினேராவது
அத்தியாயம் முற்றிற்று.

ஆக அத்தியாயம் கக-க்குச் சுலோகம் ருசகூ-

---

## பன்னிரண்டாவது சாபவிமோசன அத்தியாயம்.

அகஸ்தியர் சொல்லுகிறர்:—ஏ சைமினியே! தமிழ் நாட்டுக்கு அதிபதியாய் வீரசேன பாண்டியன் என்ற ஒரு மகாராசன் பிறந்திருந்தான். பாண்டிய குலத்தில் அவதரித்த அரசர்களுக்கெல்லாம் மகரக்கொடியே உரித்தானதால், இந்த இராசனும் மகரக்கொடியை யுடையவனய் இராச்சிய பரிபாலனம் பண்ணும்போது, ஒருகாலத்தில்

மகாகோரமான ஆரணியத்தில் அதிக வேட்டையாடினன். அவ்விடத்திற் கண்ணுவ மகாரிஷி ஆச்சிரமத்தினின்றும் ஒரு கவரிமான் வெளியிற்புறப்பட்டுச் சஞ்சரித்துக்கொண் டிருப்பதை அந்த இராசன் அறியாமல் பாணத்தினல் எய்துவிட்டான். அந்தக் கவரிமான் பாணம்பட்ட வருத் தத்தால் பேரிரைச்ச லிட்டுக்கொண்டு மரித்துப் போய்விட் டது. அந்தச் சத்தத்தைப் பர துக்கஞ் சகிக்கமாட்டாத கண்ணுவ மகாரிஷி கேட்டுத் தமிழ் நாட்டுக் கதிபதியான வீரசேனபாண்டியனைக் குறித்து எனதாச்சிரமத்தில் நித்த மும் புத்திரனைப்போல் இரக்ஷிக்கப்பட்ட கவரிமானை எவன் தயையின்றி வதைசெய்தானே, அவன் வேடனாகப் போகக் கடவனென்று சபித்தார். (௬)

அந்தக் கண்ணுவ மகாரிஷி சாபத்தால் அவ்வரசன் அந்த வனத்திலே வேடனாய்விட்டனன். வேடனாய்ப் போன இராசனுடன் வந்த சேனாசைன்னியங்கள் அவனை விட்டுப்போய் அந்த விர்த்தாந்தத்தை அவனுடைய புரோ கிதருக்கும் மந்திரிகளுக்குந் தெரியப்படுத்தினார்கள். பின்பு அந்த மந்திரி முதலானவர்களெல்லாம் அவனுடைய குமார னான இராசசேகர பாண்டியனுக்கு இராச்சிய பட்டாபிஷே கம்பண்ண அவனும் இராச்சிய பரிபாலனம் பண்ணிக் கொண்டு வந்தான். (௭)

வேடனாய்ப்போன வீரசேனனும் முன்பு தான் இரா சனா யிருந்ததை மறந்து ஒவ்வொரு வனங்களிலும் திரிந்து அவ்விடத்திலுள்ள மிருகங்களையெல்லாம் சங்கரித்துச் சஞ் சரித்துக்கொண் டிருக்கும்போது, ஒரு காலத்தில் பூர்வ புண்ணிய மகிமையால் மதுபுட்கரணி தீரத்திலிருக்கின்ற சமிவன க்ஷேத்திரம் வந்து சேர்ந்தான். அவ்விடத்தில் அவன் ஒருநாள் வனசஞ்சாரத்தால் மத்தியான காலத்திற்

சூரிய கிரணத்தால் தாபம் அடைந்து மிகவும் வருத்தப் பட்டு மதுபுஷ்கரணி தீர்த்தக்கரையில் வந்து, அவ்விடத்தி லுள்ள நிழலிலிருக்கும்போது அந்தத் தீர்த்தத்திலுள்ள மீன்கள் சாபத்தினால் வேடனாய்ப்போன இந்த இராசனைப் பார்த்து மிகுந்த தயையினாலே ஒருமித்துக் கூடிப் பரபரப் புடனே நம்மைக் கொடியாகவுடைய இந்த வீரசேனபாண் டியன் சாபத்தினால் வேடனாய்ப் போய்விட்டான்; அந்தோ இவனை நாம் சாபத்தினின்றும் விடுவிப்போமென்று நிச்ச யித்துக்கொண்டு தமது சிறகினால் மதுபுட்கரணி ஜலத்தை அடித்துக் கிளப்பி அந்தத் திவலைகளினால் அந்த இராச னுடைய சர்வாங்கமும் நனைத்துவிட்டன. (கரு)

அந்தத் தீர்த்தஜலம் சரீரத்தை நனைத்தமாத்திரத்தால் அந்த இராசன் பூர்வக்ஞானியாகிச் சாதுக்கள் மனம்போல நிர்மலமான அந்தத் தீர்த்தத்தில் இறங்கிச் சாஸ்திரவிதிப் படி ஸ்நானம் பண்ணினவுடனே சாபத்தினின்றும் விடு பட்டவனாய்ச் சுவர்ணத்துக்குச்சமானமான காந்திபொருந் திய இராச தேகத்தை யடைந்து, தேவரிஷி பிதிர்க்களுக் குத் தர்ப்பணஞ்செய்து, விபூதி உருத்திராக்கந் தரித்துக் கொண்டு திரிபுவனேஸ்வர மகாலிங்கத்தை அனேக பிர தக்ஷிண நமஸ்கார ஸ்தோத்திரங்கள் செய்து, தினந்தோ றுஞ் சோடச உபசாரத்துடனே பூசை செய்துகொண்டு அந்க்ஷேத்திரத்திற்றனேவசித்துக்கொண்டிருந்தான்.(கசு)

பின்பு அவனுடைய விருத்தாந்தத்தைக் காளியபுரத்தி லிருக்கின்ற மந்திரிகள் கேட்டு வெகு சந்தோஷத்துடனே பட்டத்து யானைக்குச் சர்வ அலங்காரமும் பண்ணி ஸ்ரீவல் லபமென்றும் சாலிவாடியென்றும் பிரசித்தமான சமிவன க்ஷேத்திரத்துக்கு வந்து வீரசேனமகாராஜனைச் சகலமான ஆடை ஆபரணங்களால் அலங்கரித்து, அந்தக் கஜத்தின்

மேலேற்றி நானுவித வாத்திய கோஷ்டங்களுடனே நகரத்துக் கழைத்துவந்து வீதிப்பிரதக்ஷிணஞ்செய்து, இரத்தின மயமான தோரணங்களால் அலங்கரிக்கப் பட்டதாயும் வெகுவிதமான கொடிகளினுல் அலங்கரிக்கப்பட்டதாயுமிருக்கின்ற காளியபுரத்தில் முன்போலப் பட்டாபிஷேகஞ்செய்து, எல்லோரும் அந்த இராசனைச் சேவித்தார்கள். (உ0)

அன்றுமுதல் தீர்த்தங்களுக்குள் உத்தமோத்தமமான அந்த மதுபுட்காணி தீர்த்தமானது திரிலோகத்திலுஞ் சாபவிமோசன தீர்த்தம் என்று பிரசித்தியடைந்தது. அந்தத் தீர்த்தத்தில் கிரகண புண்ணியகாலஞ் சங்கிராந்தி பருவகாலம் சோமவாரம் மகரமாசம் மாகமாசம் துலாமாசம் விஷுபுண்ணியகாலம் ஆகிய புண்ணிய தினங்களில் எவனொருவன் ஸ்நானம் பண்ணுகிருனே, அவன் அடையத்தக்க பலத்தைச் சொல்லுவதற்குப் பரமேச்சுரர் ஒருவரே வல்லவரன்றி, என்னைப்போன்றவரெவரு மொருகாலத்தும் வல்லவராகார். (உரு)

ஏ சைமினியே! அகஸ்தியராகின்ற என்னுடைய முகார விந்தத்தினின்றும் பெருகாநின்ற இந்தச் சற்கதாவமிர்தத்தை வீரபாண்டிய மகாராசனனவன் தனது செவிகளால் பானஞ்செய்து, பரிசுத்த மனதாய்ச் சொரூப ஞானத்தை யடைந்து, கிருத கிருத்தியனுய்ப் பிரமானந்த பூரணனுகி மிகுந்த அன்புடனே சுவர்ண புட்பங்களால் என்னை யர்ச்சித்து, நமஸ்கார ஸ்தோத்திரங்கள் பண்ணி, என்னிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு, சமிவனக்ஷேத்திரத்தினின்றுந் தனது காளியநகரத்தை யடைந்து, பரமசிவ பத்தியுடனே பரமசிவ நிஷ்டாபரனுய்ச் சிலகாலஞ்

சீவன்முத்தனாய் இராச்சிய பரிபாலனம் பண்ணிக்கொண்டிருந்து, அந்தத்தில் விதேகமுத்தியை அடைந்தான். (உடு)

ஏ சைமினியே! இப்படி முன்னம் வீரபாண்டியனுக்குச்சொன்ன சமிவனக்ஷேத்திர மகாத்மியத்தை இப்போது உமக்குச் சொன்னோம் என்று அகஸ்தியர் சொன்ன சொரூப விசாரப் பிரதானமான ஸத்கதையைச் சைமினி மகாரிஷிகேட்டுச் சுத்தசித்தராகி அகண்ட பரிபூரண பரப்பிரம வித்தையை யடைந்து, சீவன் முத்தராய்ச் சகல செகத்தையும் அகண்ட சச்சிதானந்த பரிபூரண பரமாத்து வித பிரத்திய கபின்ன பரமசிவாகாரமாகவே பார்த்துக் கொண்டிருந்தார். (உசா)

இவ்விதஞ் சூதமகாரிஷி சொன்ன இந்தப் பரமசிவ கதையை நைமிசாரணிய வாசிகளான சௌனகாதி மகாரிஷிகள் கேட்டு, மிகுந்த சந்தோஷத்துடனே வியாச மகாரிஷிக்குச் சீடராய் மகாத்மாவாய்ப் புராணஞ் சொல்லுவதில் உத்தமராய் விபூதி உருத்திராக்கதாரியாய்ச் சொரூப நிஷ்டாபரராயிருக்கின்ற சூதமகாரிஷியை வெகு விதமாய்ப் பூசித்துப் புகழ்ந்து துதித்தார்கள். (உஅ)

இப்படிப்பட்ட சமிவன க்ஷேத்திரத்தில் சென்மமெடுப்பதும், மதுபுட்கரணி தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்வதும், அந்த க்ஷேத்திர நாயகராகின்ற திரிபுவனேஸ்வர மகாலிங்கத்தை அம்பிகையுடனே தரிசித்துப் பூசிப்பதும் சீவரால் அடைவதற்கு மிகவும் அருமையாகும். இந்தச் செகத்தில் யாருக்காகிலும் இம்மூன்றும் பூருவ புண்ணிய புஞ்சபரி பாகத்தாற் கிடைக்குமானல், அவர்களுக்குக் கிரிச்சிரம் சாந்திராயண முதலான தபசுகளாலும் யாக தான முதலான தர்மங்களாலும், மற்றும் எவ்விதமான சாதனங்களாலும் என்ன பிரயோசனம்? போக மோட்ச

மான சகல புருஷார்த்தமும் இந்த மூன்றினாலேயே கிடைக்கும்; இது சித்தம். இந்தச் சமிவனக்ஷேத்திர புராணத்தைக் கேட்கின்றவர், கேட்பிக்கின்றவர், படிக்கின்றவர், படிப்பிக்கின்றவர், எழுதுகின்றவர், எழுதுவிக்கின்றவர், பூசை பண்ணுகின்றவர், எல்லோரும் இகத்திற் சகல போகத்தையும் புசித்து, அந்தத்தில் அகண்ட பரிபூரண பரமசிவ பதத்தை அடைவார்கள். (உகூ)

இப்படி ஸ்காந்தபுராணத்தில் க்ஷேத்திரகண்டத்திலுள்ள
சமிவனமான்மியத்தின் பன்னிரண்டாவது
அத்தியாயம் முற்றிற்று.

ஆக அத்தியாயம் கஉ-க்குச் சுலோகம்-கூஎடு

சமிவனக்ஷேத்திர மான்மிய வசனம்

முற்றுப்பெற்றது.